சுற்றுலா, பண்பாடு மற்றும்
அறநிலையங்கள் துறை

# சுற்றுலா

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2023 – 2024

## மானியக் கோரிக்கை எண். 29

# கா. ராமச்சந்திரன்

சுற்றுலாத் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2023

## சுற்றுலா

## மானியக் கோரிக்கை எண். 29

## கொள்கை விளக்கக் குறிப்பு 2023-2024

## பொருளடக்கம்


| வரிசை எண். | பொருள் | பக்கம் எண். |
|---|---|---|
| 1 | முன்னுரை | 1 |
| 2 | இந்தியாவில் சுற்றுலா | 2 |
| 3 | தமிழ்நாட்டில் சுற்றுலா | 5 |
| | 3.1 சுற்றுலாத் துறையின் குறிக்கோள்கள் | 11 |
| | 3.2 உத்திகள் | 12 |
| 4 | தமிழ்நாட்டிற்கு சுற்றுலாப் பயணிகள் வருகை | 15 |
| 5 | பொருட்காட்சிகள் மற்றும் விழாக்கள் | 24 |
| | 5.1 சுற்றுலாத் துறை மூலம் நடத்தப்படும் விழாக்கள் | 24 |
| | 5.1.1 இந்திய நாட்டிய விழா | 24 |
| | 5.1.2 தமிழ்நாடு சர்வதேச பலூன் திருவிழா | 25 |
| | 5.1.3 கோடை விழாக்கள் | 26 |
| | 5.1.4 சர்வதேச பட்டம் திருவிழா | 27 |

| | | |
|---|---|---|
| | 5.1.5. 2022–2023–ன் விழாக்கள் குறித்த விவரங்கள் | 28 |
| | 5.2 உள்நாட்டில் பிரபலப்படுத்துதல் | 32 |
| | 5.2.1 உள்நாட்டு பயணச் சந்தைகள் மற்றும் கண்காட்சிகள் 2022–2023 | 33 |
| | 5.3. சர்வதேச அளவில் பிரபலப்படுத்துதல் | 34 |
| | 5.3.1 வெளிநாட்டுப் பயணச் சந்தைகள்/ கண்காட்சிகள் 2022–2023 | 36 |
| | 5.4. விருதுகள் | 44 |
| 6 | உலகச் சுற்றுலா தின விழா கொண்டாட்டங்கள் | 47 |
| 7 | பொங்கல் சுற்றுலா விழா | 50 |
| 8 | சுற்றுலா விளம்பரங்கள் | 50 |
| | 8.1 தமிழ்நாடு சுற்றுலா இணையதளம் | 50 |
| | 8.2 விளம்பர வீடியோக்கள் | 51 |
| | 8.3. மின்னணு சந்தைப்படுத்துதல் முயற்சிகள் | 53 |
| | 8.3.1 நிகழ்வுகளின் நேரடி ஒளிபரப்பு | 53 |
| | 8.3.2 உலகளாவிய ஊடகம் | 54 |
| | 8.3.3 இணை வர்த்தக முயற்சிகள் | 57 |

| | | |
|---|---|---|
| | 8.4 பத்திரிகைகளில் விளம்பரங்கள் | 58 |
| | 8.5 வானொலிப் பிரச்சாரங்கள் | 59 |
| | 8.6 சமூக ஊடகப் பிரச்சாரங்கள் | 59 |
| | 8.7 Out of Home (OOH) விளம்பரம் | 63 |
| 9 | மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில்நுட்பவியல் நிறுவனம் (SIHMCT), துவாக்குடி, திருச்சிராப்பள்ளி | 65 |
| 10 | சுற்றுலாப் பாதுகாப்பு அமைப்பு | 67 |
| 11 | தமிழ்நாடு சுற்றுலாத் தல மேம்பாட்டுத் திட்டம் | 68 |
| 12 | கட்டுப்பாடுகள் | 72 |
| | 12.1. சுற்றுலாச் செயல்பாட்டாளர்களுக்குப் பதிவுகள் மேற்கொள்வதற்கான திட்டம் | 72 |
| | 12.2 சுற்றுலா வழிகாட்டிகளுக்கான பதிவுத் திட்டம் | 73 |
| | 12.3 சுற்றுலாச் சேவை வழங்குபவர்களுக்கு பதிவுகள் மேற்கொள்வதற்கான திட்டம் | 74 |

| | | |
|---|---|---|
| 13 | சுற்றுலாக் கொள்கை | 75 |
| 14 | தமிழ்நாடு சுற்றுலா விருதுகள் | 76 |
| 15 | சொகுசுக் கப்பல் சுற்றுலா அறிமுகப்படுத்துதல் | 77 |
| 16 | தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுக் குழு | 78 |
| 17 | சுற்றுலாப் பணிக்குழு | 78 |
| 18 | சென்னை விழா | 79 |
| 19 | 44–வது சதுரங்க ஒலிம்பியாட் | 80 |
| | 19.1. பதக்கங்கள் | 80 |
| | 19.2 வரவேற்புப் பைகள் | 80 |
| | 19.3. கலாச்சார நிகழ்ச்சிகள் | 81 |
| | 19.4 சுற்றுலா அரங்கம் | 81 |
| | 19.5 விளம்பர வீடியோ | 82 |
| | 19.6 வீரர்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்களுக்கான சுற்றுலாத் தொகுப்புகள் | 82 |
| | 19.7 ஹாப் –ஆன் ஹாப்–ஆஃப் சேவை | 83 |
| | 19.8 சுற்றுலா நட்பு வாகனம் | 83 |
| 20 | ஜி 20 உச்சி மாநாடு | 84 |
| 21 | ஒன்றிய அரசின் நிதியுதவித் திட்டம் | 86 |
| | 21.1 சுதேஷ் தர்ஷன் 2.0 திட்டம் | 86 |
| | 21.2 பிரசாத் (PRASHAD) திட்டம் | 87 |

| | | |
|---|---|---|
| | 21.2.1 நவக்கிரக திருக்கோயில்களில் பிரசாத் திட்டத்தின்கீழ் உள்கட்டமைப்பு மேம்பாடு | 87 |
| | 21.3 சுவச்தா பக்வாடா பிரச்சாரம் | 89 |
| 22 | தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் | 90 |
| 23 | ஓட்டல் பிரிவு | 91 |
| | 23.1 தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்களை மேம்படுத்துதல் | 93 |
| | 23.2 உணவு மற்றும் பானம் பிரிவிற்கு அமுதகம் என்ற புதிய வணிகப் பெயரை உருவாக்குதல் | 93 |
| | 23.3 குயிக் பைட்ஸ் (துரித உணவு) | 94 |
| | 23.4 ஆலயம் (பக்தர்கள் தங்கும் விடுதி) | 95 |
| | 23.5 ஓட்டல் தமிழ்நாடு திருச்சி புதிய கட்டடம் | 96 |
| | 23.6 பயிற்சிகள் | 96 |
| 24 | படகு குழாம்கள் | 97 |
| | 24.1 முட்டுக்காடு படகு குழாம் | 97 |
| | 24.2 முதலியார்குப்பம் படகு குழாம் | 98 |
| | 24.3 உதகமண்டலம் படகு குழாம் | 100 |
| | 24.4 பைக்காரா படகு குழாம் | 102 |
| | 24.5 கொடைக்கானல் படகு குழாம் | 103 |
| | 24.6 ஏற்காடு படகு குழாம் | 104 |

| | | |
|---|---|---|
| | 24.7 பிச்சாவரம் படகு குழாம் | 105 |
| | 24.8 குற்றாலம் படகு குழாம் | 105 |
| | 24.9 வாலாங்குளம் படகு குழாம் | 106 |
| | 24.10 தொலைநோக்கி இல்லம் | 107 |
| | 24.11 கோவளம் நீலக்கொடிக் கடற்கரை | 108 |
| 25 | விற்பனை மற்றும் போக்குவரத்துப் பிரிவு | 110 |
| | 25.1 தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தொகுப்புப் பயணச் சுற்றுலாக்கள் | 112 |
| | 25.1.1. திருப்பதி சுற்றுலா | 112 |
| | 25.1.2. ஆன்மீகச் சுற்றுலா | 113 |
| | 25.1.3 பிற தொகுப்பு சுற்றுலாக்கள் | 113 |
| | 25.2 இதர முன் முயற்சிகள் | 116 |
| 26 | அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் கூடிய திட்டங்கள் | 118 |
| 27 | தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் வர்த்தக முன்முயற்சிகள் | 120 |
| | 27.1 மின்னணு மற்றும் சமூக ஊடகங்களில் விளம்பரம் | 121 |
| | 27.2 வளர்ச்சிக்கான பிற முன்னெடுப்புகள் | 122 |
| 28. | பொருட்காட்சிப் பிரிவு | 124 |
| | 28.1 தீவுத்திடல், சென்னை | 124 |

| | | |
|---|---|---|
| | 28.1.1. 47வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி 2023 | 125 |
| | 28.1.2 சென்னை சங்கமம் – நம்ம ஊரு திருவிழா | 126 |
| 29 | தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மின் ஆளுமைச் செயல்திறன் | 127 |
| | 29.1 OTAகளின் பட்டியலுடன் இணைப்பு | 128 |
| | 29.2 QR குறியீடுகளைப் பயன்படுத்தி பின்னூட்ட வழிமுறை | 129 |
| | 29.3. 24 x 7 சுற்றுலா தகவல் உதவி சேவை | 130 |
| | 29.4 ஓட்டல் மின் ஆளுமை மென்பொருள் | 130 |
| | 29.5 தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக இணையதளத்தைப் புதுப்பித்தல் | 131 |
| 30 | தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் புதிய முயற்சிகள் | 131 |
| | 30.1 டிரைவ்–இன்–உணவகத்தைப் புதுப்பித்தல் | 131 |
| | 30.2 அங்கீகரிக்கப்பட்ட விற்பனை முகவர்கள் | 132 |
| | 30.3 புதிய வகை படகுகள் | 133 |

| | | |
|---|---|---|
| | 30.4 முன்னணி பயண ஏற்பாட்டாளர்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் | 133 |
| 31 | நிறுவனத்தின் மறுசீரமைப்பு | 134 |
| 32 | முடிவுரை | 135 |
| | இணைப்பு–1:சுற்றுலாத்துறை நிருவாக அமைப்பு | 137 |
| | இணைப்பு–2: தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக நிறுவன அட்டவணை | 138 |
| | இணைப்பு–3: சுற்றுலா அலுவலகங்கள் | 139 |
| | இணைப்பு–4: சுற்றுலா தகவல் மையங்கள் | 141 |

**சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை**

**மானியக் கோரிக்கை எண்: 29**

**சுற்றுலா**

**கொள்கை விளக்கக் குறிப்பு – 2023–2024**

**1. முன்னுரை**

சுற்றுலா என்பது வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரத் துறையாகும். இது வணிகம், வேலைவாய்ப்பை உருவாக்குதல், முதலீடுகள், உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் சமூகம் தழுவிய தாக்கத்தை உருவாக்குகிறது. பன்முகத் தன்மை கொண்ட தொழிலாகும். கலாச்சாரம் மற்றும் இயற்கை பாரம்பரியத்தைப் பாதுகாத்தல், நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கு தேவையான பங்களிப்பை வழங்கும் ஆற்றலை சுற்றுலாத் துறை கொண்டுள்ளது. உலக பயணம் மற்றும் சுற்றுலா அமைப்பு (WTTC) 2022 –

2032-ஆம் ஆண்டிற்கிடையில், உலகப் பொருளாதாரத்தில் சுற்றுலாத் தொழில் துறையின் பங்கு சராசரியாக ஆண்டிற்கு 5.8 விழுக்காடு என்ற விகிதத்தில் வளரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது உலகப் பொருளாதாரத்தில் எதிர்பார்க்கப்படும் வளர்ச்சி விகிதத்தை விட இரு மடங்காகும்.

சுற்றுலாத் தொழில் துறையானது 2021 ஆம் ஆண்டில், கோவிட் பெருந்தொற்றுக்குப் பிறகு குறிப்பிடத்தக்க வளர்ச்சியை அடைந்துள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் வருமானத்தை ஈட்டியுள்ளது. மேலும், 8.2 மில்லியன் வேலை வாய்ப்புகளை உருவாக்கியுள்ளது.

## 2. இந்தியாவில் சுற்றுலா

வளமான கலாச்சார பாரம்பரியம் மற்றும் பல்வேறு நிலப்பரப்புகள் இந்தியாவை முக்கிய சுற்றுலாத் தலமாக உருவாக்கியுள்ளன. இந்திய நாட்டின்

பொருளாதாரத்திற்கு மிகப்பெரிய பங்களிப்பையும், மில்லியன் வேலைவாய்ப்புகளையும் சுற்றுலாத் துறை வழங்குகிறது. நாட்டிற்கு அன்னியச் செலாவணியை ஈட்டுவதில் சுற்றுலாத்துறை தொடர்ந்து முக்கியப் பங்காற்றி வருகிறது. ஒன்றிய அரசின் சுற்றுலா அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட இந்திய சுற்றுலா புள்ளிவிவர அறிக்கை 2022–ன் படி, 2020 ஆம் ஆண்டில் 6.959 பில்லியன் அமெரிக்க டாலர்களாக உள்ள சுற்றுலாப் பிரிவின் அந்நியச் செலாவணி வருவாய் (FEE), 2022–ல் 8.797 பில்லியன் அமெரிக்க டாலர்களாக உயர்ந்து 26.4 விழுக்காடு வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. உலகப் பயணம் மற்றும் சுற்றுலா அமைப்பின் (WTTC) கூற்றுப்படி, சுற்றுலாத் தொழிலில் 178 பில்லியன் அமெரிக்க டாலர் வருவாயை இந்தியா ஈட்டியுள்ளது. இது 2021–ல் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5.8 விழுக்காடு ஆகும். சுற்றுலாத் தொழில் 32 மில்லியன் மக்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கி, இந்தியாவின் மொத்த

வேலைவாய்ப்புகளில் 7 விழுக்காடு பங்களிப்பை வழங்கி உள்ளது. மேலும், உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளால் 94 விழுக்காடு செலவிடப்படுகிறது.

இந்தியாவில் சுற்றுலாவை ஊக்கப்படுத்துவதிலும், மேம்படுத்துவதிலும் ஒன்றிய அரசின் சுற்றுலா அமைச்சகம் முக்கிய பங்காற்றுகிறது. அதன் முக்கிய செயல்பாடுகளான சுற்றுலாத் தலங்களை அடையாளம் காணுதல், மேம்படுத்துதல் மற்றும் சுற்றுலாப் பிரிவுகளை பிரபலப்படுத்துதல், சுற்றுலாத் தொழிலின் உள்கட்டமைப்பு, திறன் மேம்பாடு, நாடு முழுவதும் சுற்றுலாக் கொள்கைகள் மற்றும் திட்டங்களைச் செயல்படுத்துவதை எளிதாக்குதல் ஆகியவை அடங்கும். இந்தியாவில் சுற்றுலாத் துறையின் நிலையான மற்றும் ஒருங்கிணைந்த வளர்ச்சியை உறுதி செய்வதற்காக ஒன்றிய அரசின் சுற்றுலா அமைச்சகம், மாநில அரசுகள் மற்றும் தனியார் துறையுடன் இணைந்து செயல்படுகிறது.

## 3. தமிழ்நாட்டில் சுற்றுலா

இந்திய துணைக்கண்டத்தில் தமிழ்நாடு பல்வேறு வகையான நிலப்பரப்புகளைக் கொண்டுள்ளது. பலதரப்பட்ட சுற்றுலாப் பயணிகளின் ஆர்வத்திற்கும், விருப்பங்களுக்கும் ஏற்றவாறு பல்வேறு சுற்றுலாத் தலங்கள் இம்மாநிலத்தில் உள்ளன.

மாநிலத்தின் சிறப்பம்சங்கள்

I. மதுரை மீனாட்சி அம்மன் கோயில், சிதம்பரம் நடராஜர் கோயில், இராமேஸ்வரம் இராமநாதசுவாமி கோயில், திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் கோயில் போன்ற 36,627–க்கும் அதிகமான பழமைவாய்ந்த கோயில்கள் உள்ளன.

II. தமிழ்நாடு 1,076 கி.மீ. நீளமுள்ள கடற்கரையை கொண்டுள்ளது. இது இந்தியாவின் மொத்த கடற்கரைகளில் 13 விழுக்காட்டிற்கும் அதிகமானதாகும்.

III. பரதநாட்டியம், கர்நாடக இசை மற்றும் பிற 100 நாட்டுப்புற கலைகளை கொண்டுள்ளது.

IV. 17 வனவிலங்குச் சரணாலயங்கள், 5 தேசிய பூங்காக்கள், 17 பறவைகள் சரணாலயங்கள் மற்றும் 5 புலிகள் காப்பகங்கள் உள்ளன.

V. யுனெஸ்கோவால் அறிவிக்கப்பட்ட பின்வரும் 6 உலக பாரம்பரிய சின்னங்கள் உள்ளன:–

1. மாமல்லபுர நினைவுச் சின்னங்கள்,
2. தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோயில்,
3. அரியலூர் கங்கைகொண்ட சோழபுரம் கோயில்
4. தாராசுரத்தில் உள்ள ஐராவதீஸ்வரர் கோயில்,
5. நீலகிரி மலை ரயில்
6. மேற்கு தொடர்ச்சி மலைத்தொடர்

துடிப்பான கலாச்சாரங்கள், பல்வேறு வகையான இயற்கை நிலப்பரப்புகள், பழமையான பாரம்பரியம் மற்றும் வரலாறு ஆகியவற்றை முன்னிலைப்படுத்துவதன் மூலம், தமிழ்நாட்டை

வளமான அனுபவங்களை வழங்கும் விரும்பத்தக்க மாநிலமாக மாற்றுவது மாநில அரசின் நோக்கமாக உள்ளது.

இனிவரும் காலங்களில் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக சுற்றுலாத் துறை பத்து சுற்றுலாப் பிரிவுகளை அடையாளம் கண்டுள்ளது.

1. பாரம்பரியம் மற்றும் ஆன்மீகச் சுற்றுலா
2. கடற்கரைச் சுற்றுலா
3. சாகசச் சுற்றுலா
4. சுற்றுச்சூழல் மற்றும் வனச் சுற்றுலா
5. மருத்துவம் மற்றும் உடல்நலம் பேணும் (Medical & Wellness) சுற்றுலா
6. வணிகச் (MICE) சுற்றுலா
7. கிராமிய மற்றும் மலைத்தோட்டப் பயிர் சுற்றுலா
8. கேரவன் (Caravan) சுற்றுலா
9. பண்பாட்டுச் சுற்றுலா
10. உணவுச் சுற்றுலா

**இணைப்பு வசதிகள்**

மாநிலத்தின் சிறப்பான அமைவிடம், வலுவான உள்கட்டமைப்பு மற்றும் மேம்படுத்தப்பட்ட சாலை இணைப்புகள் ஆகியவை சுற்றுலாத் தலங்களை எளிதில் அடைய ஏதுவாக உள்ளன.

**விமான நிலையங்கள்**

தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நான்கு பன்னாட்டு விமான நிலையங்களும், தூத்துக்குடி மற்றும் சேலம் ஆகிய இரண்டு உள்நாட்டு விமான நிலையங்களும் உள்ளன.

**துறைமுகங்கள்**

தமிழ்நாட்டில் சென்னை, தூத்துக்குடி, எண்ணூர் ஆகிய மூன்று பெரிய துறைமுகங்களும், 17 சிறு துறைமுகங்களும் உள்ளன.

## இரயில் இணைப்புகள்

தேசிய அளவிலான சராசரி விகிதத்தை விட அதிகமான இரயில் இணைப்புகளைத் தமிழ்நாடு கொண்டுள்ளது. சென்னையை தலைமையிடமாகக் கொண்ட தெற்கு இரயில்வே, 4,000 கிலோ மீட்டருக்கும் மேற்பட்ட நன்கு மேம்படுத்தப்பட்ட இரயில் இணைப்புகள் மூலம் மாநிலத்தின் அனைத்து இடங்களையும் இணைக்கின்றன. சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகியவை மாநிலத்தின் முக்கிய இரயில் சந்திப்புகளாகும்.

## சாலை இணைப்புகள்

தமிழ்நாட்டில் 70,562 கி.மீ. கொண்ட நன்கு மேம்படுத்தப்பட்ட சாலை இணைப்புகள் மாநிலத்தில் உள்ள அனைத்து சுற்றுலாத் தலங்களையும் இணைக்கின்றன.

**சுற்றுலாத் துறை**

தமிழ்நாட்டில் சுற்றுலாவை மேம்படுத்தவும், ஊக்குவிக்கவும் 30.06.1971–ல் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும், 01.04.1995–ல் சுற்றுலாத் துறையும் உருவாக்கப்பட்டன. இவற்றின் நிர்வாக அமைப்பு விவர அட்டவணை இணைப்பு–I மற்றும் இணைப்பு–II–ல் அளிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்கள் மற்றும் நாட்டின் முக்கிய பெருநகரங்களில் சுற்றுலாத் துறை 38 சுற்றுலா அலுவலகங்கள் மற்றும் 22 சுற்றுலாத் தகவல் மையங்களைக் கொண்டுள்ளது.

சுற்றுலா குறித்த தகவல்களை அளித்தல், பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துதல், கண்காட்சிகள் மற்றும் திருவிழாக்களை நடத்துதல், பயணச் சந்தைகளில் பங்கேற்றல், பிற மாநிலச் சுற்றுலாத் துறைகளுடன் தொடர்பில் இருத்தல் மற்றும் பிற சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் ஆகியவை

இவ்வலுவலகங்கள் மூலம் சுற்றுலாத் துறையால் மேற்கொள்ளப்படுகின்றன. சுற்றுலா அலுவலகங்கள் மற்றும் சுற்றுலா தகவல் மையங்களின் பட்டியல்கள் இணைப்பு – III மற்றும் IV –ல் அளிக்கப்பட்டுள்ளன.

3.1. **சுற்றுலாத் துறையின் குறிக்கோள்கள்**

- தேசிய மற்றும் உலகளவில் அதிக முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலாத் தலமாக தமிழ்நாட்டினை மேம்படுத்துதல்.
- தொன்றுதொட்டு விளங்கும் வளமான மற்றும் பன்முகத்தன்மை வாய்ந்த பண்பாடு, பாரம்பரியம் மற்றும் சிறப்பு வாய்ந்த நினைவுச் சின்னங்களின் கட்டடக்கலையினை காட்சிப்படுத்துதல்.
- மாநிலத்தில், புதிய சுற்றுலாக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் ஏற்கனவே உள்ள சுற்றுலா உள்கட்டமைப்பினை மேம்படுத்துதல்.

- அதிகம் அறியப்படாத சுற்றுலாத் தலங்களைக் கண்டறிந்து, சுற்றுலாவினை மேம்படுத்துதல்.
- தமிழ்நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு, உலகத்தரம் வாய்ந்த சேவைகளை வழங்குதல்.
- நாட்டின் அந்நியச் செலாவணியினைப் பெருக்குதல்.
- சுற்றுலாத் தொழில் துறையில், வேலைவாய்ப்புகளைப் பெருக்குவதற்கான வழிவகைகளை உருவாக்குதல்.

3.2. **உத்திகள்**

- சுற்றுலாச் சுற்றுக்களில் ஒருங்கிணைந்தச் சுற்றுலாக் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்.

- மேம்படுத்தப்பட்ட இணைப்பு, உலகத்தரம் வாய்ந்த வசதிகள் மற்றும் சுற்றுலா நட்புச் சேவைகளை அளித்தல்.

- பல்வேறு முகமைகளுக்கிடையே ஒத்துழைப்புடன் கூடிய ஒருங்கிணைப்பை மேம்படுத்துதல்.
- சுற்றுச்சூழல் மற்றும் கலாச்சார ரீதியான நிலையான சுற்றுலாவை மேம்படுத்துதல்.
- சுற்றுலாவில் தனியார் மற்றும் உள்ளூர் மக்களின் பங்கேற்பை ஊக்குவித்தல்.
- திறன் வளர்ச்சி மற்றும் மனிதவள மேம்பாடு.
- உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் நடைபெறும் வர்த்தக சந்திப்புகள், சுற்றுலாச் சந்தைகள், விளம்பர முகாம்கள் மற்றும் கண்காட்சிகளில் பங்கேற்று தமிழ்நாட்டினை விரும்பத்தக்க சுற்றுலாத் தலமாக மேம்படுத்துதல்.
- சுற்றுச்சூழல் சுற்றுலாவை மேம்படுத்துதல்.
- சுற்றுலா சார்ந்த கூட்டங்கள், ஊக்கத்தொகை, மாநாடுகள், கண்காட்சிகள் (MICE–Meetings, Incentives, Conventions,

Exhibitions) மற்றும் வணிக வாய்ப்புகள் மிகுந்த சுற்றுலாப் பிரிவுகளை (Niche Tourism) வளர்ச்சிக்காக மேம்படுத்துதல்.

தனித்துவமான சுற்றுலா நிலைப்பாடுகளை வழங்குவதன் மூலம் முடிவே இல்லாத நிகழ்வுகளைக் கொண்ட (where Stories never end) மாநிலமாக தமிழ்நாட்டை நிலைநிறுத்த அர்ப்பணிப்புடன் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் கோயில்கள் மற்றும் பாரம்பரிய நினைவுச் சின்னங்களைக் கடந்து, சுற்றுச்சூழல் சுற்றுலா, உடல்நலம் பேணும் சுற்றுலா, கடற்கரைச் சுற்றுலா, வனச் சுற்றுலா, பண்பாட்டுச் சுற்றுலா, கிராமியச் சுற்றுலா, சாகசச் சுற்றுலா மற்றும் பாரம்பரியச் சுற்றுலா என எண்ணற்ற சுற்றுலாப் பிரிவுகள் காட்சிப்படுத்தப்படுகின்றன.

மேலும், சொகுசு கப்பல் சேவை, திறந்தவெளி முகாம்கள் மற்றும் கேரவன் வாகனச் சுற்றுலா போன்ற

புதிய சுற்றுலாக்களை அறிமுகப்படுத்துவதன் மூலம், சுற்றுலாப் பயணிகளின் தேவைகளை பூர்த்தி செய்கிறது. இத்தகைய ஒருங்கிணைந்த முயற்சிகள், சுற்றுலாத் தலங்களில் சிறந்த உள்கட்டமைப்புகளை வழங்குவதுடன், மாநிலத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையும் கணிசமாக அதிகரித்துள்ளது.

**4. தமிழ்நாட்டிற்கு சுற்றுலாப் பயணிகள் வருகை**

சுற்றுலாச் சேவைத்துறை தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றி வருகிறது. தமிழ்நாட்டின் புவியியல், கலாச்சார மற்றும் சுற்றுச்சூழல் பன்முகத்தன்மை ஆகியவை காரணமாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளால் இந்தியாவில் அதிகம் பார்வையிடப்படும் மாநிலங்களுள் ஒன்றாகத் திகழ்கிறது. 2021 ஆம் ஆண்டில், உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் முதலிடத்தையும், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின்

வருகையில் இரண்டாவது இடத்தையும் தமிழ்நாடு பெற்றுள்ளது.

**உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகை**

2021–ஆம் ஆண்டில், 115 மில்லியனுக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்துள்ளனர். இது உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் 17.02 விழுக்காடு ஆகும். கடந்த ஏழு ஆண்டுகளில், ஆறு ஆண்டுகள் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் தமிழ்நாடு தனது முன்னணி நிலையைத் தொடர்ந்து நிலைநிறுத்தி, உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் முதலாவது இடத்தைப் பெற்று வருகிறது.

2021 ஆம் ஆண்டில் உலகளாவிய சுற்றுலா மீட்டுருவாக்கத்தில் இந்தியாவின் வளர்ச்சி 11.05 விழுக்காடாக உள்ளது. 2022 ஆம் ஆண்டிற்கான புள்ளிவிவரங்களின் அடிப்படையில் கோவிட் பெருந்தொற்றுக்கு முந்தைய காலத்தை

ஒப்பிடுகையில், தமிழ்நாடு சுற்றுலாப் பயணிகளின் வருகையில் தோராயமாக 45 விழுக்காடு வளர்ச்சியை அடைந்துள்ளது.

**வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகை**

2021–ஆம் ஆண்டில் கோவிட்–19 வைரஸ் தொற்று கட்டுப்பாடு இருந்தபோதிலும், தமிழ்நாட்டிற்கு 1.23 மில்லியன் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வருகை புரிந்துள்ளனர். மேலும், வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. தமிழ்நாட்டிற்கான சுற்றுலாப் பயணிகள் வருகையில் அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரிட்டன், ஆஸ்திரேலியா, கனடா, சீனா, மலேசியா, ஜெர்மனி, ரஷ்யா, இலங்கை மற்றும் வங்காளதேசம் ஆகிய நாடுகள் பெரும்பங்கு வகிக்கின்றன.

தமிழ்நாட்டில் உள்ள 6 யுனெஸ்கோ உலகப் பாரம்பரிய தலங்களில் ஒன்றான மாமல்லபுர நினைவுச்

சின்னங்கள் 1,44,984 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளால் பார்வையிடப்பட்டுள்ளது. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் மாமல்லபுரம் முதலிடத்திலும், தாஜ்மஹால் 38,922 வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளால் பார்வையிடப்பட்டு இரண்டாம் இடத்திலும் உள்ளன. இது இந்தியாவிற்கு வருகை புரிந்த வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வருகையில் 45 விழுக்காடு ஆகும்.

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் பார்வையிடும் 10 பிரபலமான பாரம்பரிய நினைவுச்சின்னங்களின் பட்டியலில், திருமயம் கோட்டை அருங்காட்சியகம், வட்டக்கோட்டை, செஞ்சிக் கோட்டை, சித்தன்னவாசல் குடைவரை ஜெயின் கோயில் மற்றும் சாலுவன்குப்பம் புலிக்குகைக் கோயில் உள்ளிட்ட நினைவுச் சின்னங்கள் தமிழ்நாட்டில் உள்ளன.

கடந்த 10 ஆண்டுகளில், தமிழ்நாட்டிற்கு வருகை புரியும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப்

பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இருப்பினும், 2021–ல், கோவிட் வைரஸ் கட்டுப்பாடுகள் காரணமாக வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகை சற்று குறைந்துள்ளது.

**தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்த சுற்றுலாப் பயணிகளின் விவரம்**

| **ஆண்டு** | **உள்நாடு** | **வெளிநாடு** | **மொத்தம்** |
|---|---|---|---|
| | **(இலட்சத்தில்)** | | |
| 2017 | 3450.61 | 48.60 | 3499.21 |
| 2018 | 3859.09 | 60.73 | 3919.82 |
| 2019 | 4948.64 | 68.66 | 5017.30 |
| 2020 | 1406.51 | 12.28 | 1418.79 |
| 2021 | 1153.36 | 12.30 | 1165.66 |
| 2022 # | 2185.04 | 4.07 | 2189.11 |

#– தற்காலிகமானது

## சுற்றுலா ஆய்வு– 38 மாவட்டங்கள்

ஐக்கிய நாடுகளின் உலகச் சுற்றுலா அமைப்பு (UNWTO) பரிந்துரைத்துள்ள விதிமுறைகளின்படி, மாநிலத்தில் உள்ள 38 மாவட்டங்களிலுள்ள சுற்றுலாத் தலங்களில் ஆய்வு செய்து, தங்கும் இடங்களில் சுற்றுலாப் பயணிகளின் வருகை எண்ணிக்கை குறித்து கணக்கெடுக்கப்படும். இக்கணக்கெடுப்பு இரண்டு கட்டங்களாக 13 மாத கால அளவில் நடைபெறும்.

## நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள்

ஐக்கிய நாடுகள் சபையானது சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை ஊக்குவிக்கும் வளர்ச்சியை ஏற்படுத்த நிலையான வளர்ச்சி இலக்குகளை (SDGs) வகுத்துள்ளது. 17 நிலையான வளர்ச்சி இலக்குகளான வறுமை, பசி, சுகாதாரம், கல்வி, புவி வெப்பமடைதல், பாலின சமத்துவம், நீர், சுற்றுச்சூழல் மற்றும் சமூக நீதி உள்ளிட்ட பல்வேறு சமூக மற்றும் பொருளாதார

வளர்ச்சிகளை மேம்படுத்தும் நோக்கத்தைக் கொண்டுள்ளது. நிலையான வளர்ச்சி இலக்குகளில் ஒன்றான 8–வது இலக்காகிய, நீடித்த, உள்ளடக்கிய மற்றும் நிலையான பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பது மற்றும் அனைவருக்கும் தரமான வேலை வாய்ப்புகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

தமிழ்நாடு மாநிலத் திட்டக்குழு, சுற்றுலாத் துறைக்கு பின்வரும் இலக்கினை நிர்ணயித்துள்ளது.

"உள்ளூர் கலாச்சாரம் மற்றும் தயாரிப்புகளை ஊக்குவிக்கும் நிலையான சுற்றுலாவை மேம்படுத்துவதற்கான கொள்கைகளை வகுத்து, 2030–க்குள் செயல்படுத்துதல் மற்றும் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல்".

இந்த இலக்கை அடைய, சுற்றுலாத் துறையால் எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள் விவரம்:

1. பிரபலமடையாத சுற்றுலாத் தலங்களில் பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்த சாகச மற்றும் சுற்றுச்சூழல் முகாம்களை உருவாக்குதல்.
2. சுற்றுலா வழிகாட்டிகளின் பதிவுகளை மேற்கொள்ளவும், தரமான பயிற்சி அளிக்கவும், அவர்களின் திறன்களை மேம்படுத்தவும் அதன் மூலம் அவர்களின் வாழ்வாதார வாய்ப்புகளை மேம்படுத்தவும் புதிய திட்டத்தை அறிமுகப்படுத்துதல்.
3. சுற்றுலாக் கொள்கையின் நோக்கங்களாக சலுகைகள் மற்றும் ஊக்கத்தொகைகளை வழங்குவதன் மூலம் சுற்றுலாத் தொழில்முனைவோர்களை அதிகளவில் ஈர்த்து, தமிழ்நாட்டில் சுற்றுலாத் தொழிலில் முதலீட்டை அதிகரித்தல்.
4. மாநிலத்தின் உள்ளூர் கலாச்சாரம் மற்றும் பண்பாடுகளை வெளிப்படுத்தும் வகையில்

இந்திய நடன விழா, வீர விளையாட்டு விழா கிராமப்புற விளையாட்டு மற்றும் சென்னை விழா தேசிய கைவினைப் பொருட்கள் மற்றும் கைத்தறி கண்காட்சி போன்ற பல்வேறு நிகழ்வுகள் நடத்துதல்.

5. முக்கியச் சுற்றுலாப் பிரிவுகளான சுற்றுச்சூழல் சுற்றுலா மற்றும் சாகசச் சுற்றுலா போன்ற சுற்றுலாப் பிரிவுகளை மேம்படுத்துவதன் மூலம் வாழ்வாதார வாய்ப்புகள் ஏற்படுத்துவதுடன் உள்ளூர் சமூகங்களின் வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்துதல்.

தமிழ்நாடு சுற்றுலாத் துறையின் மேற்குறிப்பிட்ட முயற்சிகள் மூலம் மாநிலத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது.

## 5. பொருட்காட்சிகள் மற்றும் விழாக்கள்

தமிழ்நாடு துடிப்பான பண்பாடு, கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தின் சங்கமம் ஆகும். மாநிலத்தின் வளமான கலாச்சாரம், சிறந்த கலைப்படைப்புகள், கட்டடக்கலை அற்புதங்கள், உயர்ந்த பாரம்பரியம், பாரம்பரியக் கைவினைப்பொருட்கள், உணவு வகைகள் மற்றும் அறியப்படாத சுற்றுலாத் தலங்களைப் பிரபலப்படுத்துவதற்காக சுற்றுலாத் துறை ஆண்டு முழுவதும் நடைபெறும் ஏராளமான கண்காட்சிகள் மற்றும் திருவிழாக்களில் பங்கு கொள்கிறது.

### 5.1 சுற்றுலாத்துறை மூலம் நடத்தப்படும் விழாக்கள்

#### 5.1.1. இந்திய நாட்டிய விழா

உலகப் புகழ் பெற்ற இந்திய நாட்டிய விழா ஆண்டுதோறும் மாமல்லபுரத்தில் டிசம்பர் முதல் ஜனவரி வரை நடத்தப்படுகிறது. இதில் இந்தியாவின் பல்வேறு மாநில நடன வடிவங்கள் காட்சிப்படுத்தப்படுகின்றன. இந்நாட்டிய விழாவினைக்

காண ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வரலாற்றுச் சிறப்புமிக்க மாமல்லபுரத்திற்கு வருகை புரிகின்றனர். இந்த ஆண்டு, இந்திய நாட்டிய விழா 23.12.2022 முதல் 12.01.2023 வரை மாமல்லபுரத்தில் நடைபெற்றது. இதன் தொடர்ச்சியாக சென்னை தீவுத்திடலில், கலை நிகழ்ச்சிகள் 04.01.2023 முதல் 11.01.2023 வரை மற்றும் 18.01.2023 முதல் 22.01.2023 வரை நடைபெற்றன. இவ்விழாவில் 50–க்கும் மேற்பட்ட நாட்டுப்புற கலைநிகழ்ச்சிகள் மற்றும் பரதநாட்டிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

### 5.1.2 தமிழ்நாடு சர்வதேச பலூன் திருவிழா

பொங்கல் பண்டிகையையொட்டி பொள்ளாச்சியில் உள்ள ஆச்சிப்பட்டியில் 8–வது தமிழ்நாடு சர்வதேச பலூன் திருவிழா 13.01.2023 முதல் 15.01.2023 வரை மூன்று நாட்கள் நடைபெற்றது. இத்திருவிழாவில் ஸ்பெயின், பிரேசில், இங்கிலாந்து,

அமெரிக்கா, தாய்லாந்து, கனடா, பெல்ஜியம், நெதர்லாந்து மற்றும் வியட்நாம் உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் 12 வண்ணமயமான வெப்பக்காற்று பலூன்கள் பறக்கவிடப்பட்டன.

இவ்விழாவில் அமைதியான மற்றும் பசுமையான பொள்ளாச்சி சூழலில் பறக்கவிடப்பட்ட வெப்பக்காற்று பலூன்கள் 25,000–க்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகளை ஈர்த்து வானத்தை அலங்கரித்தன. இந்நிகழ்வு பங்கேற்பாளர்கள் மற்றும் சாகச ஆர்வலர்களின் கண்களுக்கு விருந்தாக அமைந்தது.

### 5.1.3 கோடைவிழாக்கள்

உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு, வால்பாறை, ஏலகிரி மற்றும் கொல்லிமலை ஆகிய மலைவாசஸ்தலங்களில் கோடைகாலங்களில் கோடைவிழாக்கள் நடத்தப்படுகின்றன. இவை சுற்றுலாப் பயணிகள் மலைவாசஸ்தலங்களின் இதமான

காலநிலையை அனுபவிக்கவும், இயற்கை எழில் கொஞ்சும் அழகினை ரசிக்கவும் உதவுகின்றன.

தமிழ்நாட்டின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியங்களை பற்றி சுற்றுலாப் பயணிகள் அறிந்து கொள்ளும் வகையில் ஆண்டு முழுவதும் சுற்றுலா விழாக்களை நடத்துவதுடன் பல்வேறு விழாக்களிலும் சுற்றுலாத்துறை பங்கு கொள்கிறது.

### 5.1.4 சர்வதேச பட்டம் திருவிழா

தமிழ்நாடு சர்வதேச பட்டம் விடும் திருவிழாவின் முதற்பதிப்பு 13.08.2022 முதல் 15.08.2022 வரை மூன்று நாட்கள் மாமல்லபுரத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் பல்வேறு நாடுகளையும் மாநிலங்களையும் குறிக்கும் வகையில் பல்வேறு வகையிலான பட்டங்கள் பறக்கவிடப்பட்டன. தாய்லாந்து, அமெரிக்கா மற்றும் மலேசியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பங்கேற்பாளர்கள் தங்கள்

பட்டம் விடும் திறமைகளை வெளிப்படுத்தி விழாவில் உற்சாகமான சூழலை ஏற்படுத்தினர்.

### 5.1.5 2022–2023–ன் விழாக்கள் குறித்த விவரங்கள்

| **விழாக்கள்** | **மாதம் மற்றும் வருடம்** |
|---|---|
| கண்ணகிக் கோவில் திருவிழா, தேனி | ஏப்ரல் 2022 |
| பல்வேறு இடங்களில் புத்தகத் திருவிழாக்கள் | ஏப்ரல் 2022 முதல் பிப்ரவரி 2023 வரை |
| வாவ் தமிழ்நாடு போட்டோ மற்றும் வீடியோ போட்டி விருதுகள் வழங்கும் விழா, சென்னை | ஏப்ரல் முதல் மே 2022 வரை |
| ஏற்காடு கோடை விழா–2022 | மே முதல் ஜுன் 2022 வரை |
| மதுரை சித்திரைத் திருவிழா–2022 | மே முதல் ஜுலை 2022 வரை |

| | |
|---|---|
| உதகமண்டலம் கோடை விழா–2022 | மே 2022 |
| கட்டபொம்மன் திருவிழா, பாஞ்சாலங்குறிச்சி | மே 2022 |
| கடலூர் கோடை விழா–2022 | ஜூன் 2022 |
| வங்காள சுற்றுலா விழா, கொல்கத்தா | ஜூன் 2022 |
| கொடைக்கானல் கோடை விழா–2022 | ஜூன் முதல் ஜூலை 2022 வரை |
| 7வது தேசிய சுற்றுலா முதலீட்டாளர்கள் மாநாடு, புதுதில்லி | ஜூலை 2022 |
| தமிழ்நாடு சர்வதேச பட்டம் திருவிழா, மாமல்லபுரம் | ஆகஸ்ட் 2022 |
| குற்றாலம் சாரல் விழா–2022 | ஆகஸ்ட் 2022 |
| வல்வில்ஓரி திருவிழா–2022, கொல்லிமலை, நாமக்கல் | ஆகஸ்ட் 2022 |

| | |
|---|---|
| ஆடி திருவாதிரை திருவிழா, கங்கைகொண்டசோழபுரம் | ஆகஸ்ட் 2022 |
| ஆடிப்பெருக்கு, ஒகேனக்கல் | ஆகஸ்ட் 2022 |
| அரசு பொருட்காட்சி, சேலம் | ஆகஸ்ட் முதல் செப்டம்பர் 2022 வரை |
| அரசு பொருட்காட்சி, திருநெல்வேலி | ஆகஸ்ட் முதல் செப்டம்பர் 2022 வரை |
| உலக சுற்றுலா தின விழா அனைத்து மாவட்டங்கள் | செப்டம்பர் 2022 |
| உலக சுற்றுலா தின விழா, ஸ்கால் கிளப், கோயம்புத்தூர் | செப்டம்பர் 2022 |
| பர்யதான் பர்வ்–2022, மும்பை | செப்டம்பர் முதல் அக்டோபர் 2022 வரை |

| | |
|---|---|
| இந்திய நாட்டிய திருவிழா, மாமல்லபுரம் | டிசம்பர் 2022 முதல் ஜனவரி 2023 வரை |
| கலை நிகழ்ச்சிகள், தீவுத்திடல், சென்னை | ஜனவரி 2023 |
| பொங்கல் விழா | ஜனவரி 2023 |
| தமிழ்நாடு சர்வதேச பலூன் திருவிழா, பொள்ளாச்சி | ஜனவரி 2023 |
| மார்கழி கிராமிய திருவிழா, தக்ஷின்சித்ரா, சென்னை | ஜனவரி 2023 |
| பாரத் பர்வ் 2023, புதுதில்லி | ஜனவரி 2023 |
| மண்வாசனை, சென்னை | மார்ச் 2023 |
| உமாஜின், சென்னை | மார்ச் 2023 |
| இந்திய பொறுப்பியல் சுற்றுலா விருதுகள் மற்றும் மாநாடு | மார்ச் 2023 |

## 5.2 உள்நாட்டில் பிரபலப்படுத்துதல்

தமிழ்நாடு சுற்றுலாத் தலங்களை பிரபலப்படுத்துவதற்கும், நாடு முழுவதும் உள்ள சுற்றுலாப் பங்குதாரர்களுடனான கூட்டாண்மைகளை ஏற்படுத்துவதற்கும் சுற்றுலாத் துறை இந்தியா முழுவதும் நடைபெறும் பல்வேறு உள்நாட்டு பயணச் சந்தைகளில் பங்கேற்கிறது. பல்வேறு மாநிலச் சுற்றுலாத் துறைகள் மற்றும் புகழ்பெற்றச் சுற்றுலாத் தொழில் நிறுவனங்கள் இந்த பயணச் சந்தைகளை ஏற்பாடு செய்கின்றனர். இப்பயணச் சந்தைகள் தமிழ்நாட்டினை சுற்றுலாவில் விரும்பத்தக்க மாநிலமாக நிலைநிறுத்த ஒரு தளமாக அமைகிறது.

### 5.2.1 உள்நாட்டு பயணச் சந்தைகள் மற்றும் கண்காட்சிகள் 2022–2023

| உள்நாட்டு பயணச் சந்தைகள் மற்றும் கண்காட்சிகள் | மாதம் மற்றும் வருடம் |
|---|---|
| தெற்காசிய பயணம் மற்றும் சுற்றுலா பரிமாற்றச்சந்தை (SATTE), புதுதில்லி | மே 2022 |
| பயணம் மற்றும் சுற்றுலாக் கண்காட்சி (TTF), கொல்கத்தா | ஜூலை 2022 |
| பயணம் மற்றும் சுற்றுலாக் கண்காட்சி (TTF), அகமதாபாத் | செப்டம்பர் 2022 |
| இந்திய சர்வதேச வர்த்தகக் கண்காட்சி (IITF), புதுதில்லி | நவம்பர் 2022 |
| பயணம் மற்றும் சுற்றுலாச் சந்தை (TTB), ராஞ்சி | நவம்பர் 2022 |
| தெற்காசிய பயணம் மற்றும் சுற்றுலா பரிமாற்றம் விழா, ஜென்எக்ஸ் 2022, (SATTE GenX) சென்னை | நவம்பர் 2022 |

| | |
|---|---|
| இந்திய பயண ஏற்பாட்டாளர்கள் சங்க மாநாடு, லக்னோ | டிசம்பர் 2022 |
| வெளிநாட்டு பயணச் சந்தை (OTM), மும்பை | பிப்ரவரி 2023 |
| தெற்காசிய பயணம் மற்றும் சுற்றுலா பரிமாற்றச் சந்தை, (SATTE) புதுதில்லி | பிப்ரவரி 2023 |
| பயணம் மற்றும் சுற்றுலாக் கண்காட்சி (TTF), சென்னை | பிப்ரவரி 2023 |
| 36வது சூரஜ்குண்ட் சர்வதேச கைவினைப்பொருட்கள் கண்காட்சி–2023, சூரஜ்குண்ட், பரிதாபாத், ஹரியானா | பிப்ரவரி 2023 |
| இந்திய பயணம் மற்றும் சுற்றுலாக் கண்காட்சி, பூரி, ஒடிசா | பிப்ரவரி 2023 |

### 5.3 சர்வதேச அளவில் பிரபலப்படுத்துதல்

தமிழ்நாடு சுற்றுலாத் துறை உலக அளவில் சுற்றுலாவை மேம்படுத்தும் பணியில் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. மாநிலத்தின் வளமான

கலாச்சார பாரம்பரியம் மற்றும் சுற்றுலாத் தலங்களை வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்குக் காட்சிப்படுத்துவதற்காக சுற்றுலாத் துறை செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலாத் தலங்களைப் பிரபலப்படுத்தவும், நமது துடிப்பான கலாச்சாரம், பண்பாடு மற்றும் பாரம்பரியத்தை சர்வதேசப் பயணச் சந்தைகளில் காட்சிப்படுத்தவும் பல்வேறு சுற்றுலாத் தொழில் முனைவோர்களுடன் இணைந்து பங்கேற்கிறது. தமிழ்நாட்டைச் சேர்ந்த தங்கும் விடுதி உரிமையாளர்கள், சுற்றுலாப் பயண முகவர்கள் மற்றும் பயண ஏற்பாட்டாளர்கள் சுற்றுலாத் துறையுடன் இணைந்து பயணச் சந்தைகளில் ஆர்வத்துடன் பங்கேற்கின்றனர். வெளிநாட்டுப் பயணச் சந்தைகளின்போது, சுற்றுலாவை மேம்படுத்த பல்வேறு சுற்றுலாப் பயண செயல்பாட்டாளர்களின் சந்திப்புகள் தமிழ்நாடு சுற்றுலாவை மேலும் வலுப்படுத்துகின்றன. இதன்மூலம் தமிழ்நாட்டிற்கு வருகை புரியும்

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகை ஒவ்வொரு வருடமும் அதிகரித்து வருகிறது.

**5.3.1 வெளிநாட்டுப் பயணச் சந்தைகள் / கண்காட்சிகள் 2022–2023**

| **வெளிநாட்டுப் பயணச் சந்தைகள் மற்றும் கண்காட்சிகள்** | **மாதம் மற்றும் வருடம்** |
|---|---|
| உலகப் பயணச் சந்தை, லண்டன் | நவம்பர் 2022 |
| சர்வதேச சுற்றுலாச் சந்தை, பெர்லின் | மார்ச் 2023 |
| மலேசிய சுற்றுலா மற்றும் பயண முகவர்கள் சங்கம் (MATTA) கண்காட்சி, கோலாலம்பூர், மலேசியா | மார்ச் 2023 |

**1. உலகப் பயணச் சந்தை (WTM), லண்டன்**

லண்டனில் நடைபெற்ற பயணம் மற்றும் சுற்றுலாத் தொழிலுக்கு புகழ்பெற்ற சர்வதேச வர்த்தகக் கண்காட்சியான World Travel Market விழாவில்

தமிழ்நாடு சுற்றுலாத் துறை பங்கேற்றது. இக்கண்காட்சி 2022 நவம்பர் 6 முதல் 8 வரை லண்டனில் நடைபெற்றது. இதில் சுற்றுலா வல்லுநர்கள், கண்காட்சியாளர்கள், அமைப்பாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் பங்கேற்றுச் சுற்றுலாத் தொழில் குறித்து தகவல்களைப் பகிர்ந்து கொண்டனர். மேலும், ஸ்காட்லாந்து மற்றும் வடக்கு அயர்லாந்தில் தமிழ்நாட்டு சுற்றுலாத் தலங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், சர்வதேச சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கவும் மற்றும் வணிகர்களுக்கு இடையிலான (B2B) வாய்ப்புகளை மேம்படுத்தவும் சுற்றுலாப் பயணச் செயல்பாட்டாளர்களின் சந்திப்புகள் நடத்தப்பட்டன.

**சுற்றுலாப் பயணச் செயல்பாட்டாளர்களின் சந்திப்புகள், ஸ்காட்லாந்து**

தமிழ்நாடு சுற்றுலாவை பிரபலப்படுத்துவதற்கு தமிழ்நாடு சுற்றுலாத் துறையால் 05.11.2022 அன்று

ஸ்காட்லாந்தில் சுற்றுலாப் பயணச் செயல்பாட்டாளர்களின் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. இது கலாச்சார நிகழ்ச்சிகள் மற்றும் சுற்றுலாப் பயண ஏற்பாட்டாளர்கள், பயண முகவர்கள் மற்றும் தமிழ்ச்சங்க உறுப்பினர்களுக்கான ஒரு சிறந்த நிகழ்வாக அமைந்தது. இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றவர்களிடம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் பல்வேறு சுற்றுலாத் தொகுப்புகள் பற்றி விளக்கப்பட்டது. தமிழ்நாடு சுற்றுலா மற்றும் சுற்றுலா பங்குதாரர்களுக்கிடையே சுமுகமான மற்றும் கூட்டாண்மைக்கான வாய்ப்பை இந்த நிகழ்வு வழங்கியது.

**சுற்றுலாப் பயணச் செயல்பாட்டாளர்களின் சந்திப்புகள், லண்டன்**

மருத்துவச் சுற்றுலாவை மேம்படுத்துவதற்கான முக்கிய சந்தையாக லண்டனை தமிழ்நாடு சுற்றுலாத் துறை அடையாளம் கண்டுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள

சுற்றுலாத் தலங்கள் பற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பதற்கும், தமிழ்நாட்டிற்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும், லண்டன் மாநகரில் 07.11.2022 அன்று லண்டன் தமிழ்ச்சங்க உறுப்பினர்கள் மற்றும் நகர பிரதிநிதிகளுக்காக சுற்றுலாத் துறை மூலம் சுற்றுலாப் பயணச் செயல்பாட்டாளர்களின் சந்திப்புகள் நடத்தப்பட்டன.

**சுற்றுலாப் பயணச் செயல்பாட்டாளர்களின் சந்திப்புகள், வட அயர்லாந்து**

வடக்கு அயர்லாந்தில் 06.11.2022 அன்று தமிழ்நாடு சுற்றுலாத் துறை தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலாத் தலங்கள் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கும், சர்வதேச சுற்றுலாப் பயணிகள் மற்றும் அங்குள்ள சுற்றுலாப் பயண ஏற்பாட்டாளர்கள் மற்றும் முகவர்களை தமிழ்நாட்டிற்கு அதிக அளவில் ஈர்க்கவும் சுற்றுலாப் பயணச் செயல்பாட்டாளர்களின்

சந்திப்பினை நடத்தியது. இந்த சுற்றுலாப் பயணச் செயல்பாட்டாளர்களின் சந்திப்பின்போது பங்கேற்பாளர்களிடம் தமிழ்நாட்டின் வளமான கலாச்சார மற்றும் பாரம்பரியமிக்க சுற்றுலாத் தலங்கள், தனித்துவமான அனுபவங்கள், தங்குமிடம், போக்குவரத்து, விற்பனை முகவர் குறித்த விபரங்கள் மற்றும் விளம்பரச் சலுகைகள் பற்றி எடுத்துரைக்கப்பட்டது.

**2. சர்வதேசச் சுற்றுலாச் சந்தை (ITB), பெர்லின்**

ஜெர்மனியில் பெர்லின் நகரில் நடைபெறும் சர்வதேசச் சுற்றுலாச் சந்தை (ITB) முன்னணி சுற்றுலாச் சந்தைகளில் ஒன்றாகும். மேலும், இது சுற்றுலாத் தொழிலின் சலுகைகள் மற்றும் சந்தைப்படுத்துதலைப் பல்வேறு சுற்றுலாச் செயல்பாட்டாளர்களுக்கு வழங்கும் இடமாக அமைகிறது. 07.03.2023 முதல் 09.03.2023 வரை நடைபெற்ற சர்வதேசச் சுற்றுலாச் சந்தையில் தமிழ்நாடு சுற்றுலாத் துறை பங்கேற்றது. இப்பயணச்

சந்தையில் சுற்றுலாப் பயண அமைப்பு நிறுவனங்கள், சுற்றுலாப் பயண ஏற்பாட்டாளர்கள், சர்வதேசச் சுற்றுலா கழகங்கள் மற்றும் சுற்றுலாப் பங்குதாரர்கள் பங்கேற்றனர்.

கோவிட்–19 பெருந்தொற்றுக்குப் பிறகு 2022–2023 சர்வதேசப் பயணச் சந்தைகள் சுற்றுலாத் தொழிலின் மீட்சிக்கு ஒரு சான்றாக விளங்குகின்றன.

**தமிழ்நாடு – செக் குடியரசு ஒருங்கிணைப்பு**

ஜனவரி 2023–ல் செக் குடியரசின் பிரதிநிதிகள் குழு தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்தனர். அவ்வமயம் செக் குடியரசிலிருந்து சுற்றுலாப் பயணிகள் வருகையை அதிகரிப்பதற்கும், சுற்றுலாச் செயல்பாட்டாளர்கள் சந்திப்புகளை நடத்தவும் தமிழ்நாடு சுற்றுலாத் துறையுடன் கலந்துரையாடல் நடைபெற்றது.

மார்ச் 13, 2023 அன்று, ப்ராக் நகரில், பிராந்திய மேம்பாட்டு அமைச்சகத்தின் துணை அமைச்சர் திரு. ஜான் ஃப்ளேக்ஸா தலைமையிலான குழுவுடன்

சுற்றுலாத் துறையின் சந்திப்புக் கூட்டம் நடைபெற்றது. செக் குடியரசின் பிராந்திய மேம்பாட்டு அமைச்சகப் பிரதிநிதிக் குழுவில், சர்வதேச சந்தைப்படுத்தல் – புதிய சந்தைகள், செக் சுற்றுலா (தேசிய சுற்றுலா நிறுவனம்), செக் குடியரசின் சுற்றுலா ஏற்பாட்டாளர்கள் மற்றும் பயண முகவர்கள் சங்கம், செக் டிராவல் ஏஜென்சிகள் சங்கம், சுற்றுலாத் துறை ஆகியவற்றின் பிரதிநிதிகள் அடங்குவர். செக் குடியரசின் பிராந்திய மேம்பாட்டு அமைச்சகம், சுற்றுப்பயண அமைப்பாளர்களிடையே B2B (வணிகர்கள் இடையிலான) ஒத்துழைப்பின் சாத்தியமான பகுதிகளை ஆராய்வதற்கும், வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்றவாறு சுற்றுலாத் தொகுப்புகளை உருவாக்குவதற்கும், இந்தியாவில் உள்ள முக்கியமான கண்காட்சிகள் மற்றும் திருவிழாக்களில் பங்கேற்பதற்கும், தமிழ்நாடு சுற்றுலாவை மேம்படுத்த பயண செயல்பாட்டாளர்களின் சந்திப்புகள் மற்றும்

சுற்றுலா குறித்த தகவல்களை உள்ளூர் ஊடகங்களில் வெளியிடுவதும் இச்சந்திப்பின் நோக்கமாக இருந்தது.

செக் குடியரசின் கலாச்சார அமைச்சக அதிகாரிகளுடன் மற்றொரு சந்திப்பு நடத்தப்பட்டது. இச்சந்திப்பின் போது, பிராந்திய கலாச்சாரப் பரிமாற்றங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளுக்கு இடையில் மாணவர் மற்றும் ஆசிரியர்களுக்கிடையேயான கலாச்சாரம் குறித்த கலந்தாய்வு, திருவிழாக்கள் மற்றும் கண்காட்சிகளில் கலைஞர்கள் பங்கேற்பது மற்றும் பரஸ்பர கலாச்சாரம் குறித்து விவாதிக்கப்பட்டது. மேலும், பாரம்பரிய யுனெஸ்கோ நினைவுச் சின்னங்களைத் திறம்பட நிர்வகிப்பதற்கும், பாதுகாப்பதற்கும், பயிற்சிப் பட்டறைகளை நடத்துவது குறித்தும் பிரதிநிதிகளால் விவாதிக்கப்பட்டது.

சுற்றுலாத் தொழிலில் தமிழ்நாடு மற்றும் செக் குடியரசின் ஒத்துழைப்பை வலுப்படுத்தவும், இரு

நாடுகளுக்கிடையேயான சுற்றுலாப் பயணிகள் வருகையை அதிகரிப்பதையும் இக்கலந்துரையாடல்கள் நோக்கமாகக் கொண்டிருந்தன.

### 5.4 விருதுகள்

தமிழ்நாடு சுற்றுலாத் துறை 2022–2023–ஆம் ஆண்டில் பின்வரும் விருதுகளை பெற்றுள்ளது.

1. 24.02.2023 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற இந்தியா டுடே சுற்றுலா ஆய்வு மற்றும் விருதுகள்–2022 விழாவில் சிறந்த கடற்கரைகள் மற்றும் கடற்கரைத் தலத்திற்கான விருது கன்னியாகுமரி மாவட்டத்தின் லெமூர் கடற்கரைக்கு வழங்கப்பட்டுள்ளது.
2. "ஆன்மீக சுற்றுலாவிற்கான சிறந்த மாநிலம்" என்ற விருதினை 16.11.2022 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற டிராவல் + லீஷர் இந்தியா மற்றும் தெற்காசியாவின் 11–வது பதிப்பு விழாவில், தமிழ்நாடு சுற்றுலாத்துறை பெற்றுள்ளது.

3. "சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்ததற்கும், சேவைத் தரத்தை மேம்படுத்தியதற்கும்" சுற்றுலாப் பிரிவில் "வெள்ளி" விருதை 88–வது SKOCH உச்சிமாநாட்டில் 18.1.2023 அன்று தமிழ்நாடு சுற்றுலாத்துறை பெற்றுள்ளது.

4. இந்தியாவில் பிரமிக்க வைக்கும் மலைக் காட்சிகளுக்கான சிறந்த இடத்திற்கான பிரிவில் புதுடெல்லியில் அவுட்லுக் டிராவலர் விருதுகள்–2022 விழாவில் நீலகிரி மாவட்டம், குன்னூர் "வெள்ளி" விருதை 24.8.2022 அன்று பெற்றது.

5. கிரேக்கத்தின் ஏதென்ஸில் செப்டம்பர் 2022–ல் நடைபெற்ற "எதிர்காலத்தில் சுற்றுலா" உச்சி மாநாட்டில் "பசுமை இடங்களுக்கான சிறந்த 100 நிலைத்தன்மைக் கதைகளுக்கான விருதுகள் 2022" இன் கீழ் ஸ்ரீரங்கம், திருச்சிராப்பள்ளி, தேர்ந்தெடுக்கப்பட்டது.

6. "இந்தியாவின் சிறந்த பாரம்பரிய தலத்திற்கான" விருது தமிழ்நாடு சுற்றுலாத்துறைக்கு 8.3.2023 அன்று பெர்லினில் நடைபெற்ற சர்வதேசப் பயண விருதுகள் 2023 நிகழ்ச்சியில் பசுபிக் பகுதி சுற்றுலா எழுத்தாளர்கள் சங்கத்தால் (PATWA) வழங்கப்பட்டது.
7. "இந்தியாவின் சிறந்த சுற்றுலா அமைச்சர் 2023" என்ற விருது தமிழ்நாடு அரசின் மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. கா.ராமச்சந்திரன் அவர்களுக்கு பசுபிக் பகுதி சுற்றுலா எழுத்தாளர்கள் சங்கத்தால் (PATWA) 8.3.2023 அன்று பெர்லினில் நடைபெற்ற சர்வதேசப் பயண விருதுகள் விழாவில் வழங்கப்பட்டது.
8. இந்தியப் பொறுப்பியல் சுற்றுலா விருதுகள் 2023 (India Responsible Tourism Awards 2023) மாநாடு தமிழ்நாட்டின் உதகமண்டலத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வைத் தமிழ்நாடு சுற்றுலாத்துறையின்

ஒருங்கிணைப்புடன் அவுட்லுக் டிராவலர் ஏற்பாடு செய்தது. இவ்வருடாந்தர விருது நிகழ்வுகள், நாட்டில் பொறுப்பியல் பயணம் மேற்கொள்பவர்களை அங்கீகரித்து பாராட்டுகிறது. 17.03.2023 அன்று உதகமண்டலத்தில் நடந்த IRTA 2023 விழாவில், தங்கும் உறைவிடப்பிரிவின் (Homestay) கீழ் நிலையான தலைமைத்துவத்தில் சிறிய உள்ளூர் தங்கும் விடுதிப் பிரிவில், வெள்ளி விருது "ஜேக்கப் அண்ட் க்ளோஸ்டர் ஃபார்ம்ஸ், சென்னை" க்கு வழங்கப்பட்டது.

## 6. உலகச் சுற்றுலா தின விழா கொண்டாட்டங்கள்

சுற்றுலாவின் சமூக, கலாச்சார, அரசியல் மற்றும் பொருளாதார தாக்கங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த சர்வதேச உலகச் சுற்றுலா தினம் ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் 27 அன்று ஐக்கிய நாட்டு உலகச் சுற்றுலா அமைப்பால் (UNWTO) அறிவிக்கப்பட்டு கொண்டாடப்படுகிறது. 2022 ஆம் ஆண்டில், உலகச்

சுற்றுலா தினத்திற்கான கருப்பொருள் "சுற்றுலாவை மறுபரிசீலனை செய்வது". இது தற்போதைய சுற்றுலா நடைமுறைகள், சமூகம் மற்றும் சுற்றுச்சூழலின் விளைவுகளை மறுபரிசீலனை செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியது.

உலகச் சுற்றுலா தினம் (World Tourism Day) 2022-ஐ முன்னிட்டு சுற்றுலாத் துறை தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் சுற்றுலாவின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த கலாச்சார நிகழ்ச்சிகள், தூய்மைப் பிரச்சாரங்கள், கருத்தரங்குகள் மற்றும் சிறப்புக் கலாச்சார நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

சென்னையில் உலகச் சுற்றுலா தினம்-2022ன் ஒரு பகுதியாக கீழ்க்காணும் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

1. தமிழ்நாடு சுற்றுலா விருதுகள் முதன்முறையாக வழங்கப்பட்டன.

2. "Influencers on Wheels" என்ற டிஸ்கவர் தமிழ்நாடு 2.0 நிகழ்ச்சி 27.09.2022 அன்று கலைவாணர் அரங்கத்தில் கொடியசைத்து துவக்கி வைக்கப்பட்டது.
3. உணவு மற்றும் உறைவிடம் நிறுவனங்கள், சாகசச் சுற்றுலா நடத்துபவர்கள், கேம்பிங் ஏற்பாட்டாளர்கள், கேரவன் வாகனச் சுற்றுலா ஏற்பாட்டாளர்கள், கேரவன் நிறுத்துமிடம் ஏற்பாட்டாளர்கள் ஆகியோர்களுக்கான பதிவுகள் மேற்கொள்ள புதிய திட்டம் வெளியிடப்பட்டது.
4. 'வாவ் தமிழ்நாடு' 1.0 மற்றும் 'எனது தமிழ்நாடு, எனது பாரம்பரியம்' என்ற சமூக ஊடகப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.
5. 'வாவ் தமிழ்நாடு 2.0' புகைப்பட மற்றும் வீடியோக்களுக்கான போட்டிகள் அறிவிக்கப்பட்டன.

## 7. பொங்கல் சுற்றுலா விழா

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் சுற்றுலா அலுவலர்களால் பொங்கல் சுற்றுலா விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. தமிழ்நாட்டின் பாரம்பரியக் கலாச்சார திருவிழாவில் ஏராளமான வெளிநாட்டு, உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் கலந்து கொள்கின்றனர்.

## 8. சுற்றுலா விளம்பரங்கள்

### 8.1 தமிழ்நாடு சுற்றுலா இணையதளம்

தமிழ்நாட்டில் சுற்றுலா தொடர்பான அனைத்துத் தகவல்களையும் அளிக்கும் இணையதளமாக தமிழ்நாடு சுற்றுலா இணையதளம் விளங்குகிறது. இது மாநிலத்தில் சுற்றுலாப் பற்றிய தகவல்களை அளிப்பதற்கும், விளம்பரப்படுத்தவும், சந்தைப்படுத்தவும் மற்றும் பல்வேறு அம்சங்களையும் கொண்டுள்ளது. இவ்விணையதளம் பயணம் மேற்கொள்பவரின் பயணம் முழுவதிற்கும் சுற்றுலா

தொடர்பான தகவல்களை அளிப்பதற்கும் மற்றும் பயணத்திற்கு முன், பின் உள்ள கட்டங்களில் பதிவுகளை மேற்கொள்ளவும் உதவுகிறது. உலகளாவிய அணுகும் தன்மையுடன், பயனாளிகள் எளிதில் தகவல்களைப் பெறுவதற்கும், உலகெங்கிலும் உள்ள பார்வையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் இணையதளம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## 8.2 விளம்பர வீடியோக்கள்

தமிழ்நாட்டில் சுற்றுலாவை மேம்படுத்த, மாநிலத்தின் கலாச்சார மற்றும் வரலாற்று இடங்கள், சாகசச் சுற்றுலா செயல்பாடுகள், பாரம்பரிய கைவினைப்பொருட்கள், தனித்துவமான உணவு வகைகள் மற்றும் கிராமப்புறச் சுற்றுலா அனுபவங்களை வெளிப்படுத்தும் விளம்பர வீடியோக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த வீடியோக்களில் மலைவாசஸ்தலங்கள், அருவிகள் மற்றும் கடலோரப்

பகுதிகள் போன்ற சுற்றுச்சூழல் சுற்றுலாத் தலங்களும் இடம் பெற்றுள்ளன. கூடுதலாக, யுனெஸ்கோ பாரம்பரியத் தலங்கள், கலை மற்றும் கைவினைப்பொருட்கள், வனவிலங்குகள், உணவு வகைகள், சாகச விளையாட்டுகள் மற்றும் இயற்கை சுற்றுலாத் தலங்கள் உள்ளிட்ட தமிழ்நாட்டின் சுற்றுலாப் பற்றிய விளம்பர வீடியோ குறித்த விரிவான தகவல்கள் இணைய தளத்திலும் இடம்பெற்றுள்ளன. தமிழ்நாட்டின் வளமிக்க பாரம்பரியம் மற்றும் இயற்கை அழகைக் குறித்து சுற்றுலாப் பயணிகளுக்கு தெரிவிப்பதே இவ்விளம்பர வீடியோக்களின் நோக்கம். ஜல்லிக்கட்டு மற்றும் இந்திய நாட்டிய விழா போன்ற சிறப்பு நிகழ்வுகளும் பார்வையாளர்களுக்கு மாநிலத்தின் கலாச்சார பாரம்பரியத்தை விளக்கும் வகையில் படமாக்கப்பட்டுள்ளன.

## 8.3 மின்னணு சந்தைப்படுத்துதல் முயற்சிகள்

மின்னணு விளம்பரங்கள் தமிழ்நாட்டின் மீதான சுற்றுலாப் பார்வையை மேம்படுத்துவதையும், சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன. இந்த இலக்கை அடைய, ஹிந்துஸ்தான் டைம்ஸ், இ–எய்ட்டீன், நெட்வொர்க் 18, இந்தியன் எக்ஸ்பிரஸ், டெய்லி ஹன்ட் மற்றும் ஒன் இந்தியா போன்ற முக்கிய இணையதளங்களில் மின்னணு விளம்பரப் பிரச்சாரங்களை தொடங்கியுள்ளது. இந்த பிரச்சாரங்கள் உலகளாவிய பார்வையாளர்களைச் சென்றடைவதற்கும், மாநிலத்தின் சுற்றுலாத் தலங்கள், தனித்துவமான அனுபவங்கள் மற்றும் கலாச்சாரப் பாரம்பரியத்தை வெளிப்படுத்துவதற்கும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

### 8.3.1 நிகழ்வுகளின் நேரடி ஒளிபரப்பு

இந்திய நாட்டிய விழா மற்றும் நம்ம ஊரு திருவிழா போன்ற தமிழ்நாட்டின் சில முக்கிய சுற்றுலா

நிகழ்வுகளை பேஸ்புக், ட்விட்டர் மற்றும் யூடியூப் போன்ற சமூக ஊடகங்களில் நேரலையாக ஒளிபரப்பு செய்வதற்கு தமிழ்நாடு சுற்றுலாத்துறை உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இந்நிகழ்வுகள் தமிழ்நாட்டின் வளமான கலாச்சாரத்தையும், பன்முகத்தன்மையையும் பறைசாற்றும் வகையில் உள்ளதால் அதிகளவில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை சென்றடைகின்றன. தமிழ்நாடு சுற்றுலாத்துறை பிரபலமான சமூக ஊடகங்களில் நேரடி ஒளிபரப்பு செய்வதன் மூலம், இம்முக்கியச் சுற்றுலா நிகழ்வுகள் அதிகளவில் பார்வையாளர்களைச் சென்றடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

### 8.3.2 உலகளாவிய ஊடகம்

**நேஷனல் ஜியோகிரா:ஃபிக் டிராவலர் (NatGeo) மற்றும் டிராவல் அண்ட் :ஃபுட் நெட்வொர்க் (TFN)**

நேஷனல் ஜியோகிரா:ஃபிக் டிராவலர் (NatGeo) மற்றும் டிராவல் அண்ட் :ஃபுட் நெட்வொர்க் (TFN)

ஆகியவை உயர்தரத்திலான பயணம் தொடர்பான தகவல்களை அறிவதற்கான பிரபலமான ஊடகங்களாகும். தமிழ்நாடு சுற்றுலாத் துறையானது NatGeo மற்றும் TFN உடன் இணைந்து மாநிலத்தின் பல்வேறு சுற்றுலாத் தலங்களை சிறப்பித்துக் காட்டும், மனதைக் கவரும் மற்றும் சுற்றுலாப் பற்றிய தகவல்கள் தரும் பயணக் காணொலிகளை உருவாக்கியுள்ளது.

இந்த ஊடகங்களால் தயாரிக்கப்பட்ட மணல் நிறைந்த கடற்கரைகள் முதல் மேற்குத் தொடர்ச்சி மலைகளின் மூடுபனி மலைகள் வரையிலான காணொலிகள் தமிழ்நாட்டின் பல தனித்துவமான தன்மைகளை வெளிப்படுத்துகின்றன. பிரமிக்க வைக்கும் சிறந்த காட்சிகள் மற்றும் மனதைக் கவரும் வகையில் அமைக்கப்பட்ட விவரிப்பு ஆகியவை இந்த காணொலிகளை உத்வேகம் அடையவும் தமிழ்நாட்டைப் பற்றிய தகவல்களைத் தேடும் சுற்றுலாப் பயணிகளுக்குச் சிறந்த தளமாகவும் அமைகிறது.

மேலும், தமிழ்நாடு சுற்றுலாவை மேம்படுத்துவதற்கான புகைப்படக் கதைகள் NatGeo, TFN மற்றும் தமிழ்நாடு சுற்றுலாத் துறையின் சமூக வலைதளங்களில் பகிரப்பட்டுள்ளன. இது தமிழ்நாட்டின் சுற்றுலாத் தலங்கள் பற்றிய விவரங்களை அதிகளவில் பார்வையாளர்களைச் சென்றடைவதை அதிகரிக்கவும், தமிழ்நாட்டில் சுற்றுலாவை மேம்படுத்தவும் உதவுகிறது. இக்காணொலிகள் 10 மில்லியன் பார்வையாளர்களைச் சென்றடைந்துள்ளன.

**Travel XP**

Travelxp என்பது சுற்றுலாத் துறையில் ஒரு புகழ்பெற்ற பயண உள்ளடக்கம் மற்றும் வசீகரிக்கும் நிகழ்ச்சிகளுக்காக புகழ்பெற்ற ஒரு உலகலாவிய தொலைக்காட்சி சேனலாகும். தமிழ்நாடு சுற்றுலாத் துறையானது Travelxp சேனல்கள் மற்றும் Travelxp சமூக ஊடகங்களுடன் இணைந்து தமிழ்நாட்டின் கலாச்சாரம், பாரம்பரியம் மற்றும் இயற்கை அழகை

சித்தரிக்கும் உயர்தரத்திலான காணொலிகளை உருவாக்கியுள்ளது. இந்த காணொலிகள் Travelxp உலகளாவிய தளங்களில் ஒளிபரப்பப்பட்டு, தமிழ்நாட்டின் அழகையும் கலாச்சாரத்தையும் 21 மொழிகளில் உலகெங்கிலும் உள்ள பார்வையாளர்களுக்கு வழங்கியது. Travelxp–ன் ஆழ்ந்த பயண அனுபவங்கள் மற்றும் கதைக்கூறல் ஆகியவை சுற்றுலாப் பயணிகள் மற்றும் ஆர்வலர்கள் இடையே கவனத்தைப் பெற்ற முக்கிய இடமாக தமிழ்நாடு விளங்குகிறது.

### 8.3.3 இணை வர்த்தக முயற்சிகள்

தமிழ்நாடு சுற்றுலாத் துறையானது "ஸ்டோரி டிரெயில்ஸ்" நிறுவனத்துடன் இணைந்து, தமிழ்நாட்டின் கலாச்சாரம், பாரம்பரியம் மற்றும் இயற்கை வளங்களை வெளிப்படுத்தும் வகையில் சுற்றுலா குறித்த தகவல்களை அளிக்கும் காணொலிகளை உருவாக்கியது. இந்த காணொலிகள் பார்வையாளர்களைக் கவரவும், தமிழ்நாட்டின்

பாரம்பரியம் மற்றும் கலாச்சாரம் குறித்த விழிப்புணர்வை அதிகரிக்கவும் தமிழ்நாடு சுற்றுலாத் துறையின் சமூக ஊடகங்களில் தொடர்ந்து வெளியிடப்பட்டுள்ளன.

### 8.4 பத்திரிகைகளில் விளம்பரங்கள்

தமிழ்நாட்டின் சுற்றுலாத் தலங்களைப் பிரபலப்படுத்துவதற்காக, சுற்றுலாத் துறையின் மூலம் முன்னணிச் சுற்றுலாப் பத்திரிகைகள், சிறந்த சஞ்சிகைகள், உள்நாட்டு மற்றும் சர்வதேச விமான பத்திரிகைகளில் ஆண்டு முழுவதும் விளம்பரங்கள் வெளியிடப்படுகின்றன.

தி வீக், டிராவல் ஹைட்ஸ் மாத இதழ், ஓபன் மேகசின், ஸ்வர் சரிதா (இந்தி), குங்குமம் வார இதழ் (தமிழ்), இந்தியா டுடே, டிராவல்டைன், T3FS இதழ் சிறப்பு வெளியீடு (WTM – 2022), AutoX இதழ், BW பிஸினஸ் வேர்ல்ட் இதழ், இந்தியா டுடே (சுதந்திர தின சிறப்பு வெளியீடு, அவுட்லுக் இதழ், T3FS இதழ் சிறப்பு வெளியீடு (WTM லண்டன்–2022) போன்ற சர்வதேச

மற்றும் தேசிய இதழ்களில் தமிழ்நாடு சுற்றுலாத் தலங்கள் குறித்து விளம்பரப்படுத்தப்படுகின்றன.

### 8.5 வானொலிப் பிரச்சாரங்கள்

வானொலிப் பிரச்சாரங்கள் அதிகப் பயனாளர்களை சென்றடைவதற்கான ஒரு மதிப்புமிக்க ஊடகமாகும். அகமதாபாத், லக்னோ, புனே மற்றும் கான்பூர் ஆகிய இடங்களில் தமிழ்நாட்டை ஒரு சிறந்த சுற்றுலா இடமாக விளம்பரப்படுத்த வானொலி பிரச்சாரங்கள் வெளியிடப்பட்டன.

### 8.6 சமூக ஊடகப் பிரச்சாரங்கள்

தமிழ்நாடு சுற்றுலாத் துறையானது சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி சுற்றுலாத் தலங்களை மேம்படுத்துவதில் சிறந்த அணுகுமுறையை வெளிப்படுத்தியுள்ளது. சமூக ஊடகங்களில் அதிக பின்தொடர்பவர்களை கொண்ட நபர்களுடன் இணைந்து போட்டிகள் நடத்துதல் போன்ற பல்வேறு சமூக ஊடக உத்திகளைச் செயல்படுத்தி வருவதன்

மூலம், தமிழ்நாடு சுற்றுலாத்துறை தனது பார்வையாளர்களுடன் வெற்றிகரமாக அதன் வரம்பை விரிவுபடுத்தியுள்ளது. இம்முயற்சிகள் சுற்றுலாப் பயணிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும், தமிழ்நாட்டிற்கு அதிக சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதிலும் குறிப்பிடத்தக்க பங்காற்றுகிறது. சமூக ஊடகங்களைத் திறம்பட பயன்படுத்தியதன் மூலம், மாநிலத்தின் தனித்துவமான சலுகைகளை வெற்றிகரமாக காட்சிப்படுத்தியதுடன் பயணிகளின் மனதை மயக்கும் சுற்றுலாத் தலமாக தமிழ்நாடு சுற்றுலா தன்னை நிலைநிறுத்தியுள்ளது.

**தமிழ்நாடு வனவிலங்குப் புகைப்படப் போட்டி**

My Wild Tamil Nadu புகைப்படப் போட்டி வனவிலங்குப் புகைப்பட ஆர்வலர்களிடையே அமோக வரவேற்பைப் பெற்றது. இது தமிழ்நாட்டின் வளமான பல்லுயிர் மற்றும் இயற்கை வளங்களின் அழகைக் காட்டும் வகையில் அமைந்தது.

**கிறிஸ்துமஸ் புகைப்படப் போட்டி**

இந்தப் போட்டியில் தமிழ்நாட்டின் மதம் சார்ந்த மற்றும் வளமான கட்டடக்கலைப் பாரம்பரியத்தை எடுத்துரைக்கும் தேவாலயங்களின் சிறந்த படங்களைப் பகிர்ந்து கொள்ள புகைப்படக் கலைஞர்கள் அழைக்கப்பட்டனர்.

**அற்புதமான ஏப்ரல் பிரச்சாரம்**

இந்தப் பிரச்சாரம் மாநிலத்தின் தனித்துவமான தகவல்கள் மற்றும் சுற்றுலாத் தலங்களை உள்ளடக்கியது. இது தமிழ்நாட்டின் அதிகம் அறியப்படாத சுற்றுலாத் தலங்களை உலகலாவிய பார்வையாளர்களுக்கு காட்சிப்படுத்தியது.

**பொங்கல் குறித்த பிரச்சாரம்**

பொங்கல் குறித்த பிரச்சாரத் தொடரில் திறமையான புகைப்படக் கலைஞர்களால் பொங்கல் பண்டிகையின் போது எடுக்கப்பட்ட சிறந்த

புகைப்படங்கள் இடம்பெற்றன. இப்புகைப்படங்கள் மாநிலத்தின் பண்டிகை குறித்த துடிப்பான உணர்வுகளை வெளிப்படுத்தும் விதத்தில் அமைந்தன.

**Explore தமிழ்நாடு பிரச்சாரம்**

தமிழ்நாட்டின் பல்வேறு மற்றும் தனித்துவமான இடங்களை சிறப்பித்துக் காட்டும் வகையில், தமிழ்நாட்டில் மாவட்ட வாரியாக பார்வையிடப்படவேண்டிய இடங்கள் மற்றும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்த விரிவான வழிகாட்டியை பார்வையாளர்களுக்கு Explore தமிழ்நாடு பிரச்சாரம் வழங்கியது.

**சதுரங்க ஒலிம்பியாட் (Chess Olympiad) பிரச்சாரம்**

மாமல்லபுரத்தில் நடந்து முடிந்த சதுரங்க ஒலிம்பியாட் போட்டியின் போது, சமூக ஊடகங்களில் மாமல்லபுரத்தை விளம்பரப்படுத்துவதற்காகவும், சுற்றுலாப் பயணிகளையும், சதுரங்க ஆர்வலர்களையும்

ஈர்க்கும் வகையில், நகரத்தில் நேரத்தை எவ்வாறு செலவிடுவது என்பது குறித்த யோசனைகளைப் பகிர்ந்துகொள்ளும் நோக்கிலும் சதுரங்க ஒலிம்பியாட் பிரச்சாரம் நடத்தப்பட்டது.

**பிரிட்டிஷ் கட்டடங்கள் குறித்த பிரச்சாரம்**

உலகப் பயணச் சந்தையின் போது (WTM), தமிழ்நாடு சுற்றுலாத்துறை பிரிட்டிஷ் கட்டடங்கள் பிரச்சாரத்தின் மூலம் தமிழ்நாட்டின் அற்புதமான பிரிட்டிஷ் கட்டடக்கலைகளை விளம்பரப்படுத்தியது, இப்பிரச்சாரம் மாநிலத்தின் சிறப்பான மற்றும் மாறுபட்ட கட்டடக்கலைப் பாரம்பரியத்தை எடுத்துக்காட்டும் வகையில் அமைந்தது.

**8.7 Out of Home (OOH) விளம்பரம்**

தமிழ்நாடு சுற்றுலாத் துறையின் பல்வேறு வெளியூர் விளம்பர உத்திகள் 2022-2023 ஆம் ஆண்டில் மாநிலத்திற்கு சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்க உதவியது.

- இரயில் நிலையங்களில் காட்சிப்படுத்தப்படும் ஒலி–ஒளி விளம்பரங்கள் மற்றும் எல்சிடி டிவி திரைகள், அதிவேக இரயில் என்ஜின்களின் மீது விளம்பரங்கள், இரயில் பெட்டிகளுக்குள், இருக்கை பின்பக்கம், உணவுத் தட்டுகள் மற்றும் இரயில் பயணசீட்டுகளில் விளம்பரங்கள் ஆகியவை இவ்விளம்பரங்களில் அடங்கும். முக்கிய இரயில் நிலையங்களில் சுற்றுலா விளம்பர காணொளிகள் காட்சிப்படுத்தப்பட்டன.
- தில்லி மெட்ரோ நிலையங்களிலும் ஒளிரும் திரைகளில் விளம்பரங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.
- சென்னை உள்நாட்டு மற்றும் சர்வதேச விமான நிலையங்களின் உட்புறங்களில் அழகியல் மேம்பாட்டின் மூலம் மறுசீரமைக்கப்பட்டன. தமிழ்நாட்டின் சுற்றுலா வளங்களை விளம்பரப்படுத்த மற்றும் காட்சிப்படுத்த

விமான நிலைய வளாகத்தில் கண்கவரும் படங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

- இந்தூர், கொச்சின், கோவா, சூரத் மற்றும் வதோதரா விமான நிலையங்களில் காணொலித் திரைகளின் மூலம் விளம்பரங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.
- தனித்துவமான மற்றும் வசீகரிக்கும் வடிவமைப்புகளுடன் கூடிய கூடார வடிவ அட்டைகள் பயணச்சந்தைகளில் காட்சிப்படுத்தப்படுவதற்காக வடிவமைக்கப்பட்டு அச்சிடப்பட்டன.

**9. மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில் நுட்பவியல் நிறுவனம் (SIHMCT), துவாக்குடி, திருச்சிராப்பள்ளி**

'உணவுக் கைவினை நிறுவனம்' என்று முன்னாளில் அழைக்கப்பட்ட மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில்

நுட்பவியல் நிறுவனம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள துவாக்குடியில் 01–10–1981 அன்று நிறுவப்பட்டது. ஒன்றிய அரசு மற்றும் தமிழ்நாடு அரசு இணைந்து நிதியுதவி செய்யும் இந்த நிறுவனத்தை, உத்தரபிரதேச மாநிலம் நொய்டாவில் உள்ள உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில் நுட்பவியலுக்கான நிறுவனங்களின் தேசியக் குழு (NIHMCT) ஒரு நிறுவனமாக அங்கீகரித்துள்ளது. இந்நிறுவனம் பின்வரும் படிப்புகளில் தரமான பயிற்சியினை அளிக்கிறது:–

- உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில் நுட்பவியல் குறித்த மூன்றாண்டு பட்டப்படிப்பு.
- உணவுத் தயாரிப்பு, உணவு மற்றும் பானங்கள் பரிமாறுதல், தங்குமிடப் பராமரிப்பு, அடுமனைப் பொருட்கள் மற்றும் இனிப்பு வகைகள் தயாரித்தல் குறித்த ஒன்றரை ஆண்டு பட்டயப் படிப்பு.

- உணவுத் தயாரிப்பு, உணவு மற்றும் பானங்கள் பரிமாறுதல், தங்குமிடப் பராமரிப்பு, பேக்கரிப் பொருட்கள் மற்றும் இனிப்பு வகைகள் தயாரித்தல் பற்றிய சான்றிதழ் படிப்பு.

மேலும், ஒன்றிய அரசின் 'ஹுனார் சே ரோஜ்கார்' திட்டத்தின் கீழ் வழக்கமானப் பயிற்சிகளுடன் குறுகிய காலப் பயிற்சிகளும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

இந்நிறுவனத்திற்கு அத்தியாவசியச் செலவுகள் மற்றும் பராமரிப்பை மேற்கொள்ள மாநில அரசால் ஒவ்வொரு ஆண்டும் ரூ.5.00 லட்சம் தொடர் மானியமாக வழங்கப்படுகிறது.

## 10. சுற்றுலாப் பாதுகாப்பு அமைப்பு

சுற்றுலாப் பயணிகளுக்கு பாதுகாப்பான மற்றும் வசதியான பயணத்தை உறுதி செய்யும் முதன்மை நோக்கத்துடன் சுற்றுலாத் துறையின் கீழ், 2010 ஆம் ஆண்டு முதல் சுற்றுலாப் பாதுகாப்பு அமைப்பு செயல்பட்டு வருகிறது. இந்த அமைப்பு சுற்றுலாப்

பயணிகளுக்கு அவர்களின் உள்ளூர் மொழியில் தகவல்களை வழங்குவதற்கும், அவர்களின் வருகையின் போது தேவையான தகவல் மற்றும் உதவிகளை வழங்குவதற்கும், எதிர்பாராத நிகழ்வுகளின் போது உதவிகளை வழங்குவது இதன் நோக்கமாகும்.

## 11. தமிழ்நாடு சுற்றுலாத் தல மேம்பாட்டுத் திட்டம்

சுற்றுலாத் துறையானது 2021 ஆம் ஆண்டில் மாநிலத்தில் உள்ள சுற்றுலாத் தலங்கள் / இடங்களை கண்டறிந்து மேம்படுத்த "தமிழ்நாடு சுற்றுலாத் தல மேம்பாட்டுத் திட்டம்" என்ற புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. தமிழ்நாட்டின் சுற்றுலா ஆதாரங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் அனைத்துப் பங்குதாரர்களின் நிபுணத்துவத்துடன் அடையாளம் காணப்பட்ட சுற்றுலாத் தலங்களின் முழுமையான வளர்ச்சியை அடைய இத்திட்டம் வழிவகுக்கிறது.

2022–2023 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின் கீழ், பின்வரும் பணிகள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன:–

| வ. எண். | பணியின் பெயர் | ஒப்பளிக்கப் பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | தமிழ்நாட்டிலுள்ள அணைக்கட்டுகள் மற்றும் நீர்த்தேக்கங்களை சுற்றுலாத் தலங்களாக மேம்படுத்துதல். | 806.00 |
| 2. | பூண்டி அணைக்கட்டு பகுதியினை பல்வேறு வசதிகள் கொண்ட சுற்றுலாத் தலமாக மேம்படுத்துதல். | 300.00 |
| 3. | ஆண்டிபாளையம் ஏரிப்பகுதியினை பல்வேறு வசதிகள் கொண்ட சுற்றுலாத் தலமாக மேம்படுத்துதல். | 147.00 |
| 4. | கொளவாய் ஏரிப்பகுதியினை பல்வேறு வசதிகள் கொண்ட சுற்றுலாத் தலமாக மேம்படுத்துதல். | 144.10 |

| | | |
|---|---|---|
| 5. | ஒகேனக்கல் அருவிப் பகுதியினை பல்வேறு வசதிகள் கொண்ட சுற்றுலாத் தலமாக மேம்படுத்துதல். | 1757.65 |
| 6. | முட்டம் கடற்கரை மற்றும் திற்பரப்பு அருவி பகுதியை மேம்படுத்துதல் | 715.06 |
| 7. | பாரம்பரிய நகரமான பூம்புகாரை புதுப்பித்தல் | 2360.00 |
| 8. | குற்றாலம் அருவிப்பகுதியில் சுற்றுலா வசதிகள் ஏற்படுத்துதல் | 1134.56 |
| 9. | பிச்சாவரம் படகு இல்லப் பகுதியினை பல்வேறு வசதிகள் கொண்ட சுற்றுலாத் தலமாக மேம்படுத்துதல். | 1407.00 |
| 10. | முத்துப்பேட்டை மாங்குரோவ் காடுகள் பகுதியினை பல்வேறு வசதிகள் கொண்ட சுற்றுலாத் தலமாக மேம்படுத்துதல். | 400.00 |
| 11. | முத்துக்குடாப் பகுதியினை பல்வேறு வசதிகள் கொண்ட சுற்றுலாத் தலமாக மேம்படுத்துதல். | 306.31 |

| | | |
|---|---|---|
| 12. | வத்தல்மலை பகுதியினை பல்வேறு வசதிகள் கொண்ட சுற்றுலாத் தலமாக மேம்படுத்துதல். | 223.00 |
| | **மொத்தம்** | **9700.68** |

## பிற திட்டங்கள்

| **வ. எண்.** | **பணியின் பெயர்** | **ஒப்பளிக்கப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்)** |
|---|---|---|
| 1. | மதுரை அலங்காநல்லூர் பகுதியில் உலகத்தரம் வாய்ந்த ஜல்லிக்கட்டு அரங்கம் கட்டுதல் | 4406.00 |
| 2. | சென்னை கிழக்கு கடற்கரை சாலையில் "ஆன்மீக மற்றும் கலாச்சார சுற்றுச்சூழல் பூங்கா" அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயார் செய்தல். | 177.83 |
| 3. | இராமேஸ்வரம் மற்றும் கொடைக்கானல் பகுதிகளில் ஹெலிகாப்டர் இறங்குதளம் அமைக்க விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயாரித்தல் | 112.10 |

## 12. கட்டுப்பாடுகள்

### 12.1 சுற்றுலாச் செயல்பாட்டாளர்களுக்குப் பதிவுகள் மேற்கொள்வதற்கான திட்டம்

பல்வேறு சுற்றுலாச் செயல்பாட்டாளர்களின் செயல்பாடுகளை ஒழுங்குபடுத்தவும், பாதுகாப்பான சுற்றுலா நடைமுறைகளை மேம்படுத்தவும் மற்றும் பதிவுகள் மேற்கொள்ளவும் புதிய திட்டத்தை சுற்றுலாத் துறை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தத் திட்டங்கள் சுற்றுலாத் தொழிலில் பாதுகாப்பான அணுகுமுறையை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டு உலக சுற்றுலா தினமான 27.09.2022 அன்று வெளியிடப்பட்டது.

சுற்றுலாச் செயல்பாட்டாளர்களுக்கு பின்வரும் பிரிவுகளில் வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன:–

1. சாகசச் சுற்றுலா (காற்று, நிலம் மற்றும் நீர் சார்ந்த செயல்பாடுகள்)
2. கேரவன் சுற்றுலா மற்றும் கேரவன் பூங்காக்கள்

3. முகாம் தலங்கள்

4. தங்கும் விடுதிகள் மற்றும் படுக்கை மற்றும் காலை உணவு வழங்கும் ஓய்விடங்கள்.

சுற்றுலாப் பங்குதாரர்கள் எளிதில் இத்திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு ஏதுவாக செயல்முறைத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் இணையதளம் மூலம் பதிவுகளை மேற்கொள்ளவும் மற்றும் வெளிமுகமை மூலம் ஆய்வுகள் செய்வதும் அடங்கும். 2022-2023 ஆம் ஆண்டில், 350-க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்டு, 160-க்கும் மேற்பட்ட சுற்றுலாத் தொழில் முனைவோர்களுக்கு பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

## 12.2 சுற்றுலா வழிகாட்டிகளுக்கான பதிவுத் திட்டம்

சுற்றுலாப் பயணத்தின்போது சுற்றுலாக் குறித்த தகவல்கள் மற்றும் பிற அனுபவங்களை வழங்குவதில் சுற்றுலா வழிகாட்டிகள் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

சுற்றுலா வழிகாட்டிகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து அவர்களின் திறனை மேம்படுத்தும் வகையில் "தமிழ்நாடு சுற்றுலா வழிகாட்டி பதிவு திட்டம்–2023"ஐ அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சுற்றுலா வழிகாட்டிகள் பதிவுகளை மேற்கொள்ளவும், சிறந்த பயிற்சி பெறவும் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு தரமான சேவைகளை அளிப்பதற்கும் இத்திட்டம் வழிவகுக்கிறது. இத்திட்டத்தின்கீழ், சுற்றுலா வழிகாட்டிகள், பொது, நிபுணர் மற்றும் மொழியியல் வழிகாட்டி என மூன்றுப் பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

### 12.3 சுற்றுலாச் சேவை வழங்குபவர்களுக்கு பதிவுகள் மேற்கொள்வதற்கான திட்டம்

தமிழ்நாட்டில், சுற்றுலாத் தலங்கள் மற்றும் சுற்றுலாத் தொழிலில் இடையீட்டாளர்களான பயண ஏற்பாட்டாளர்கள், பயண முகவர்கள் மற்றும் சுற்றுலாப்

பேருந்து இயக்குபவர்கள் சுற்றுலா விநியோகத் தொடரின் முக்கிய பங்களிப்பாளராக உள்ளனர். இவர்களுக்கான பதிவுகள் மேற்கொள்ளவும், தமிழ்நாட்டிற்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளுக்கு தரமான சேவைகளை வழங்குவதற்கும் இனிமையான அனுபவங்கள் வழங்குவதை உறுதி செய்யவும் தமிழ்நாடு சுற்றுலாத் துறை, "தமிழ்நாடு சுற்றுலாப் பயண ஏற்பாட்டாளர்கள், பயண முகவர்கள், சுற்றுலாப் பேருந்து இயக்குபவர்களுக்கான திட்டம் –2023" ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. இதில் இரண்டு பிரிவான வகைப்பாடுகளுக்கு Standard, Premium என அங்கீகாரம் வழங்கப்படும்.

**13. சுற்றுலாக் கொள்கை**

சுற்றுலாத் தொழிலில் வேலைவாய்ப்புகளை வழங்குவதில் ஒரு முன்னணி மாநிலமாகத் திகழவும், பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையிலும் புதிய சுற்றுலாக் கொள்கை தமிழ்நாடு அரசால்

அறிமுகப்படுத்தப்படும். இக்கொள்கை, சுற்றுலாவிற்கு தொழில்துறை தகுதிநிலை வழங்குவதிலும், சலுகைகள், ஊக்கத்தொகைகள், தனியார் முதலீடுகளை ஈர்ப்பது மற்றும் தனியரை சுற்றுலாத் தொழிலில் பங்குகொள்ள செய்வதிலும் முக்கியப் பங்காற்றும். தமிழ்நாட்டின் சுற்றுலா வளர்ச்சிக்கு நிலையான சூழலை ஏற்படுத்துவதுடன், பாதுகாப்பான மற்றும் தரமான சுற்றுலாச் சேவைகளை வழங்குவதற்கும், சுற்றுலா முதலீடுகளை ஈர்ப்பதற்கும் உகந்த சூழலை உருவாக்குதே இக்கொள்கையின் இலக்காகும்.

### 14. தமிழ்நாடு சுற்றுலா விருதுகள்

27.09.2022 அன்று உலகச் சுற்றுலா தினத்தை முன்னிட்டு சுற்றுலாத் தொழில்முனைவோர்களை ஊக்குவிக்கும் விதமாக முதன்முதலாக தமிழ்நாடு சுற்றுலா விருதுகள் வழங்கப்பட்டன. இவ்விழாவில் சுற்றுலாச் செயல்பாட்டாளர்கள், விமான நிறுவனங்கள்,

விடுதிகள், உணவகங்கள், வழிகாட்டிகள் போன்ற பல்வேறு சுற்றுலாப் பங்குதாரர்களை உள்ளடக்கிய பதினேழு வெவ்வேறு பிரிவுகளில் 52 விருதுகள் வழங்கப்பட்டன.

## 15. சொகுசுக் கப்பல் சுற்றுலா அறிமுகப்படுத்துதல்

உலகளாவிய சுற்றுலாத் தொழிலில் சொகுசுக் கப்பல் சுற்றுலா ஒரு முக்கியப் பிரிவாகும். சுமார் 1,076 கி.மீ. நீளமுள்ள நீண்ட கடற்கரையைக் கொண்ட தமிழ்நாட்டில் சொகுசுக் கப்பல் சுற்றுலாவை மேம்படுத்த அதிகளவில் சாத்தியக்கூறுகள் உள்ளன. பல்வேறு ஆடம்பர வசதிகளுடன் கூடிய Cordelia Cruises என்ற சொகுசுக் கப்பல் சேவை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சென்னை துறைமுகத்திலிருந்து துவக்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வு தமிழ்நாடு சுற்றுலாத் துறைக்கு ஒரு முக்கிய மைல் கல்லாக அமைகிறது.

## 16. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுக் குழு

மாநிலத்தில் உள்ள சுற்றுலாத் தலங்களின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்பட வேண்டிய மேம்பாட்டுப்பணிகள் குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குவதற்காக "தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுக் குழு" மறுசீரமைக்கப்பட்டது. 13.12.2022 அன்று நடைபெற்ற இக்குழுவின் கூட்டத்தில், சுற்றுலாத் தொழிலின் வளர்ச்சிக்கு பல்வேறு ஆலோசனைகள் சுற்றுலாத் தொழில் வல்லுநர்களால் வழங்கப்பட்டன.

## 17. சுற்றுலாப் பணிக்குழு (Tourism Task Force)

தமிழ்நாட்டில் முதன்முறையாக சுற்றுலாப் பணிக்குழு உருவாக்கப்பட்டுள்ளது. இப்பணிக்குழுவில் கல்வி நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் இலாப நோக்கற்ற நிறுவனங்களின் பங்குதாரர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். தமிழ்நாட்டில் சுற்றுலாத்

தொழில் துறையின் தற்போதைய நிலையை மதிப்பீடு செய்யவும் மற்றும் வளமான இடங்களைக் கண்டறிந்து சுற்றுலாவை மேம்படுத்தவும் இக்குழுவின் பங்குதாரர்களின் அனுபவ வளங்கள் உதவி புரிகின்றன. இப்பணிக்குழுவின் முதல் கூட்டம் 13.12.2022 அன்று நடைபெற்றது.

**18. சென்னை விழா**

சென்னை விழாவின் 1வது பதிப்பு – தேசியக் கைவினைப் பொருட்கள், கைத்தறி மற்றும் உணவுக் கண்காட்சி கோடை விடுமுறை நாட்களில் ஏப்ரல் 29 முதல் மே 14, 2023 வரை சென்னையில் உள்ள தீவுத்திடலில் நடைபெற உள்ளது. இந்தியா மற்றும் உலகெங்கிலும் உள்ள கைவினைப்பொருட்கள் மற்றும் கைத்தறிகளின் சிறந்த வகைகளை வெளிப்படுத்தும் இந்த கண்காட்சி 16 நாட்களுக்கு நடைபெறும்.

## 19. 44–வது சதுரங்க ஒலிம்பியாட்

44–வது FIDE சதுரங்க ஒலிம்பியாட் மாமல்லபுரத்தில் ஜூலை 27 முதல் ஆகஸ்ட் 10, 2022 வரை நடைபெற்றது. மேலும், இந்நிகழ்வின் வெற்றியை உறுதி செய்வதில் சுற்றுலாத் துறை முக்கியப் பங்காற்றியது.

### 19.1 பதக்கங்கள்

செஸ் ஒலிம்பியாட்டின் முதன்மை முயற்சியாக, தமிழ்நாட்டின் வளமான பாரம்பரியத்தின் கூறுகளை உட்கொண்டு சுற்றுலாத் துறை இந்த நிகழ்ச்சிக்கானப் பதக்கங்களை வடிவமைத்தது.

### 19.2 வரவேற்புப் பைகள்

தமிழ்நாடு பொக்கிஷங்கள் புத்தகம், கடற்கரைக் கோயிலின் மாதிரி நினைவுப் பரிசு, செஸ் கிட், தொப்பியுடன் சென்னை மற்றும் மாமல்லபுரத்தின் சுற்றுலாத் தகவல் கையேடு அடங்கிய மாமல்லபுரம்

கடற்கரைக் கோயில் வரைபடத்துடன் அமைக்கப்பட்ட பையை வீரர்கள் மற்றும் பிரதிநிதிகளுக்கான வரவேற்புப் பையாக இத்துறை வடிவமைத்துத் தயாரித்தது.

**19.3 கலாச்சார நிகழ்ச்சிகள்**

பங்கேற்பாளர்களை மயக்கும் வண்ணம் இந்திய மற்றும் மேற்கத்திய நாட்டியக் கலை வடிவங்களைக் கொண்டு கலாச்சார நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

**19.4 சுற்றுலா அரங்கம்**

தமிழ்நாடு சுற்றுலா அரங்கில் முப்பரிமாண சுற்றுலா அனுபவங்களை வழங்கும் மெய்நிகர் **(Virtual Reality)** சுற்றுலாக்கள் மற்றும் மேஜிக் புத்தகம் போன்றவைகள் காட்சிப்படுத்தப்பட்டன. சுற்றுலாப் பயணிகள் நிகழ்ச்சி நடைபெறும் இடத்தைச் சுற்றியுள்ள பல்வேறு இடங்களுக்குச் செல்வதை எளிதாக்க, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம்

ஹாப்–ஆன் ஹாப்–ஆப் பேருந்துகள் மற்றும் சுற்றுலா நட்பு ஆட்டோக்கள் இயக்கப்பட்டன.

**19.5 விளம்பர வீடியோ**

சென்னையின் அழகு, பாரம்பரியம், கலாச்சாரம், சுற்றுலாத் தலங்கள், உணவு மற்றும் செயல்பாடுகளை குறித்த "ஆட்டோ அண்ணாவுடன் சென்னையைச் சுற்றிப் பார்க்கலாம்" என்ற வீடியோ சுற்றுலாப் பயணிகள் மற்றும் விளையாட்டு வீரர்களுக்குப் பயன்படும் வகையில் செஸ் ஒலிம்பியாட் 2022–ல் வெளியிடப்பட்டது.

**19.6 வீரர்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்களுக்கான சுற்றுலாத் தொகுப்புகள்**

சென்னை மற்றும் மாமல்லபுரத்தின் வளமான பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தை உலகெங்கிலும் உள்ள வீரர்களுக்குக் காட்சிப்படுத்தும் வகையில், ஒரு நாள் சிறப்புச் சுற்றுலாத் தொகுப்பு தமிழ்நாடு சுற்றுலா

வளர்ச்சிக் கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு இயக்கப்பட்டது.

### 19.7 ஹாப்–ஆன் ஹாப்–ஆஃப் சேவை

44–வது செஸ் ஒலிம்பியாட் போட்டியின் போது ஹாப்–ஆன் ஹாப்–ஆஃப் சேவையைத் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அறிமுகப்படுத்தியதன் மூலம் வசதியான மற்றும் தொடர் போக்குவரத்துச் சேவையை வழங்கியது. சோழமண்டலம் கலைஞர்களின் கிராமத்திலிருந்து மாமல்லபுரத்தில் அமைந்துள்ள நிகழ்வு நடைபெறும் இடம் வரை, பல்வேறு இடங்களில் பேருந்து நிறுத்தங்களுடன் இச்சேவை வழங்கப்பட்டது. இந்த சேவை பொதுமக்கள் மற்றும் நிகழ்வில் பங்கேற்றவர்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்றது.

### 19.8 சுற்றுலா நட்பு வாகனம்

சுற்றுலாப் பயணிகள் நிகழ்ச்சி நடைபெறும் இடத்தைச் சுற்றியுள்ள பல்வேறு சுற்றுலாத்

தலங்களுக்குச் செல்வதற்கு வசதியாக, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சுற்றுலா நட்பு வாகனத்தை அறிமுகப்படுத்தியதுடன் நட்பு வாகன ஆட்டோ ஓட்டுநர்களுக்கு உரிய பயிற்சியும் வழங்கப்பட்டது.

## 20. ஜி20 உச்சி மாநாடு

சர்வதேசப் பொருளாதார ஒத்துழைப்புக்கான முன்னணி அமைப்பான ஜி20–ன் தலைமைப் பொறுப்பை இந்தியா தற்போது வகித்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக, முதல் ஜி20–ன் கல்வி பணிக்குழு சென்னை ஐஐடி–யில், "கல்வியில் டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் பங்கு" என்ற தலைப்பில் இரண்டு நாள் கருத்தரங்கம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் 30 நாடுகளைச் சார்ந்த 80 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு சுற்றுலாத் துறை மாநிலத்தின் விருந்தோம்பல்களை வெளிப்படுத்தும் வகையில் முயற்சிகளை மேற்கொண்டது. சென்னை ஐஐடி

மற்றும் தாஜ் கோரமண்டல் ஓட்டல் ஆகியவற்றில் அமைக்கப்பட்ட அரங்குகளில், தமிழ்நாட்டின் கைவினை மற்றும் கைத்தறிப் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டன. மாமல்லபுரத்தில் பிரதிநிதிகளுக்காக பாரம்பரிய நடைப்பயணமும் ஏற்பாடு செய்யப்பட்டது. தமிழ்நாட்டின் வளமான கட்டடக்கலைப் பாரம்பரியத்தை அறிந்துகொள்வதற்காக, யுனெஸ்கோ பராம்பரியச் சின்னமான மாமல்லபுரத்தில் அமைந்துள்ள கடற்கரைக் கோயில் வளாகம், அர்ஜுனன் தபசு மற்றும் ஐந்து ரதங்கள் ஆகிய இடங்களுக்கு பிரதிநிதிகள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

தமிழ்நாட்டின் துடிப்பான கலாச்சாரத்தைப் பறைசாற்றும் வகையில் கலாச்சார நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. தமிழ்நாட்டின் பல்வேறு சுற்றுலாத் தலங்களைச் சிறப்பித்துக் காட்டும் முப்பரிமாண சுற்றுலா அனுபவங்களை வழங்கும்

மெய்நிகர் (Virtual Reality) சுற்றுலாக்கள் அரங்குகளில் அமைக்கப்பட்டன.

## 21 ஒன்றிய அரசின் நிதியுதவித் திட்டம்

### 21.1 சுதேஷ் தர்ஷன் 2.0 திட்டம்

சுற்றுலாத் தலங்களில் ஒருங்கிணைந்த வளர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் ஒன்றிய அரசின் சுற்றுலா அமைச்சகம் (MoT, GoI) சுதேஷ் தர்ஷன் 2.0 என்ற மேம்படுத்தப்பட்டத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தில் ஒருங்கிணைந்த அணுகுமுறை மூலம் சுற்றுலாத்தல மேம்பாடு, சுற்றுலாத் தலங்களுக்குத் தேவையான இணைப்புச் சாலை, கலாச்சாரக் கட்டமைப்பு, பொது சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான பிற வசதிகள் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டின் மாமல்லபுரம் மற்றும் நீலகிரி ஆகிய இரண்டு இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

## 21.2 பிரசாத் (PRASHAD) திட்டம்

ஒன்றிய அரசின் சுற்றுலா அமைச்சகம் (MoT, GoI) நன்கு திட்டமிடப்பட்ட சுற்றுலா உள்கட்டமைப்பை வழங்குவதன் மூலம் அடையாளம் காணப்பட்ட யாத்திரைத் தலங்களின் சுற்றுலா வளர்ச்சியை மேம்படுத்த 'புனித யாத்திரைப் புத்தாக்கம் மற்றும் ஆன்மீகம், பாரம்பரியம் பெருக்க இயக்கம்' (Pilgrimage Rejuvenation and Spiritual, Heritage Augmentation Drive – PRASHAD) என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

### 21.2.1 நவக்கிரக திருக்கோயில்களில் பிரசாத் (PRASHAD) திட்டத்தின்கீழ் உள்கட்டமைப்பு மேம்பாடு

இந்து மதத்தில், ஒன்பது கிரகங்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ள நவக்கிரகக் கோயில்கள்

முக்கிய வழிபாட்டுத் தலங்களாகும். இத்திருக்கோயில்கள் பக்தர்களை மட்டுமல்லாமல், இந்தியாவின் வளமான கலாச்சாரம் மற்றும் கட்டிடக்கலைப் பாரம்பரியத்தை ஆராய்வதில் ஆர்வமுள்ள சுற்றுலாப் பயணிகளையும் ஈர்க்கின்றன.

இத்திட்டத்தின் கீழ், உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக ஆலங்குடி, கஞ்சனூர், திங்களூர் மற்றும் திருவெண்காடு ஆகிய நவக்கிரகக் கோயில்கள் கண்டறியப்பட்டுள்ளன. இவை, நவக்கிரகக் கோயில்களின் சுற்றுலாத் திறனை மேம்படுத்துவதையும், தேவையான உள்கட்டமைப்பை மேம்படுத்துவதன் மூலம் அதிகமான சுற்றுலாப் பயணிகளுக்கு மேம்பட்ட அனுபவத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு ரூ.17.53 கோடிக்கான ஆரம்ப திட்ட அறிக்கை, ஒன்றிய அரசு, சுற்றுலா அமைச்சகத்தின் ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீட்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 21.3 சுவச்தா பக்வாடா பிரச்சாரம்

ஒன்றிய அரசின் சுவச்தா பக்வாடா (Swachhata Pakhwada) பிரச்சாரம் என்பது நாட்டில் தூய்மை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட விழிப்புணர்வு பிரச்சாரம் ஆகும். இது தூய்மையான மற்றும் ஆரோக்கியமான இந்தியாவை அதன் குடிமக்கள் அனைவருக்கும் உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட சுவச் பாரத் பணியின் (Swachh Bharat Mission) இன்றியமையாத அங்கமாகும். சுவச்தா பக்வாடா (Swachhata Pakhwada) பிரச்சாரம் குடிமக்களுடன் தொடர்ந்து ஈடுபடுவதன்மூலம், மக்களிடையே மாற்றத்தை ஏற்படுத்தி, நாடு முழுவதும் தூய்மை மற்றும் சுகாதாரக் கலாச்சாரத்தை ஊக்குவிக்கும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

இந்த முயற்சியை முன்னெடுத்துச் செல்லும் வகையில், 2022 ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 16 முதல் 30 வரையிலான கால அவகாசத்தில் ஒன்றிய

அரசின் சுற்றுலா அமைச்சகம், சுவச்தா பக்வாடா பிரச்சாரத்தை மேற்கொண்டது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் சுவச்தா பக்வாடா பிரச்சார நிகழ்ச்சி சுற்றுலாத் துறை மூலம் நடத்தப்பட்டது.

## 22. **தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 30.06.1971 அன்று நிறுவப்பட்டது, சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான தங்குமிட வசதிகள், பல்வேறு தொகுப்புச் சுற்றுலாக்கள், படகு குழாம்கள், பொருட்காட்சி மற்றும் திருவிழாக்கள் போன்றவை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் முக்கியச் செயல்பாடுகளாகும்.

| **வணிக செயல்பாடுகள்** | **எண்ணிக்கை** |
|---|---|
| தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் நேரடியாக நிருவகிக்கப்படும் ஓட்டல்கள் | 28 |
| அறைகள் | 844 |
| குத்தகைக்கு விடப்பட்டுள்ள ஓட்டல்கள் | 12 |

| | |
|---|---|
| படகு குழாம்கள் | 09 |
| உணவகங்கள் | 05 |
| ஆலயம் (பக்தர்கள் தங்கும் விடுதி ) | 03 |
| தொலைநோக்கி இல்லங்கள் | 03 |
| நீலக்கொடி கடற்கரை | 01 |
| பேருந்துகள் | 14 |

மேலும், உதகமண்டலம், கொடைக்கானல் மற்றும் ஏற்காடு போன்ற கோடைவாழிடங்களில் மாணவர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் தேவைகளைக் குறைந்த செலவில் (Budget Tourist) நிறைவு செய்திட இளைஞர் விடுதிகளை நடத்துகிறது.

## 23. ஓட்டல் பிரிவு

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தற்போது 28 ஓட்டல்களை நேரடியாக நிருவகித்து வருகிறது, சுற்றுலாப் பயணிகள், விருந்தினர்களின் எதிர்பார்ப்புகள் மற்றும் தேவைகளை நிறைவேற்றுவதற்காக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தனது நிர்வாகத்தின்

கீழுள்ள அனைத்து ஓட்டல்களின் தரத்தையும், சேவைகளையும் மேம்படுத்துவதற்காக நிலையான நடவடிக்கைகளையும், உறுதியான முயற்சிகளையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்களில் பணிபுரியும் பணியாளர்களின் தொழில்நுட்ப அறிவு, செயல் மற்றும் மேலாண்மைத் திறனை மேம்படுத்துவதற்குப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

ஓட்டல் தமிழ்நாடு, திருநெல்வேலியின் குத்தகைக் காலம் நிறைவடைந்த நிலையில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. திருநெல்வேலியில் உள்ள ஓட்டல் தமிழ்நாட்டினை மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது.

## 23.1 தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்களை மேம்படுத்துதல்

2022–2023–ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட ஓட்டல்கள் புதுப்பிக்கப்பட்டு தரம் உயர்த்தப்பட்டன.

1. ஓட்டல் தமிழ்நாடு திறந்தவெளி உணவகம், தீவுத்திடல், சென்னை.
2. கடற்கரை ஓய்வு வளாகம், மாமல்லபுரம்.
3. ஓட்டல் தமிழ்நாடு, மதுரை–II.
4. ஓட்டல் தமிழ்நாடு, கன்னியாகுமரி.
5. ஓட்டல் தமிழ்நாடு, கோயம்புத்தூர்.
6. ஓட்டல் தமிழ்நாடு, திருச்சி.
7. ஓட்டல் தமிழ்நாடு, இராணிப்பேட்டை.
8. ஓட்டல் தமிழ்நாடு, திருநெல்வேலி.

## 23.2 உணவு மற்றும் பானம் பிரிவிற்கு "அமுதகம்" என்ற புதிய வணிகப் பெயரை உருவாக்குதல்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக உணவகங்களில் உணவு மற்றும் பானத்தின் (F&B)

விற்பனையை மேம்படுத்துவதற்காக **"அமுதகம்"** என்ற பெயரில் வணிகப் பெயர் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த முன்முயற்சியானது தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல் பிரிவினைப் பொதுமக்கள், வாடிக்கையாளர்கள் எளிதில் அடையாளம் காணவும், விளம்பரப்படுத்தவும், தெளிவான புள்ளி விவரங்களோடு சரியான முடிவு எடுக்கவும் வணிகம் மற்றும் சேவையை மேம்படுத்தவும் உதவும். தற்போது 35 உணவகங்கள் அமுதகம் என்ற பெயரில் இயங்கி வருகின்றன.

### 23.3 குயிக் பைட்ஸ் (துரித உணவு)

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் முக்கியமான சுற்றுலாத் தலங்களில் உயர்தர துரித உணவு விற்பனை நிலையங்களை நிறுவும் நோக்கத்துடன் குயிக் பைட்ஸ் என்ற வணிகப் பெயரில் துரித உணவகங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. முக்கியச் சுற்றுலாத் தலங்களான வண்டலூர், கோவளம், ஏற்காடு மற்றும் வாலங்குளம் ஏரி ஆகிய இடங்களில் இவை

திறக்கப்பட்டுள்ளன. இந்த முயற்சி தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் வருவாயை அதிகரிப்பதோடு மட்டுமல்லாமல் மக்களிடையே துரித உணவுப் பண்டங்களை எளிதில் அடையாளம் கண்டு தேர்வு செய்யும் நிலையை ஏற்படுத்துகின்றது. 2022-2023 ஆம் ஆண்டு வண்டலூர், கோவளம், ஏற்காடு, மற்றும் வாலாங்குளம் ஆகிய நான்கு இடங்களில் நிறுவப்பட்டு 2023 மார்ச் மாதம் வரை ரூ.56.59 இலட்சம் வருவாய் ஈட்டியுள்ளது.

**23.4 ஆலயம் (பக்தர்கள் தங்கும் விடுதி)**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், "**ஆலயம்**" என்ற பெயரில் இராமேஸ்வரம், திருவண்ணாமலை மற்றும் காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் பக்தர்கள் தங்கும் மூன்று விடுதிகளை 50:50 என்ற இலாபப் பகிர்வு அடிப்படையில் இந்து சமய அறநிலையங்கள் துறையுடன் இணைந்து நடத்தி வருகின்றது. கடந்த 2022-2023-ஆம் ஆண்டு ஆலயம் விடுதிகள் மூலம் ரூ. 291.54 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

## 23.5 ஓட்டல் தமிழ்நாடு திருச்சி புதிய கட்டடம்

15 அறைகள் மற்றும் பல்நோக்கு அரங்கம் கொண்ட புதிய கட்டடத் தொகுதி 27.09.2022 அன்று திருச்சியில் ஓட்டல் தமிழ்நாடு திறந்து வைக்கப்பட்டது.

## 23.6 பயிற்சிகள்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சேவைத் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் வாடிக்கையாளர்களின் திருப்தியை அதிகரிக்கும் நோக்கத்துடன் பணியாளர்களின் திறன்களை மேம்படுத்த ஒரு சிறப்பு நிறுவனத்தின் மூலம் சென்னை தீவுத்திடல் ஓட்டல் தமிழ்நாடு திறந்தவெளி உணவகம், மாமல்லபுரம் கடற்கரை ஓய்வு வளாகம், கன்னியாகுமரி ஓட்டல் தமிழ்நாடு, ஏற்காடு, மதுரை–I & II மற்றும் இராமேஸ்வரம் ஓட்டல்களில் பணிபுரியும் பணியாளர்களுக்குத் தொழில்முறை பயிற்சி வழங்கப்பட்டது.

## 24. படகு குழாம்கள்

படகு சவாரி மற்றும் சாகச நீர் விளையாட்டுகள் நடத்துவதற்கு உகந்த பல நீர்நிலைகளை உள்ளடக்கிய மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. சுற்றுலாப் பயணிகளுக்கு நினைவில் நீங்காத அனுபவத்தைத் தரும் வகையில், சாகசப் படகுச் சவாரி மற்றும் நீர் விளையாட்டுகளுடன் கூடிய படகு குழாம்களை முட்டுக்காடு, முதலியார்குப்பம், உதகமண்டலம், பைக்காரா, கொடைக்கானல், ஏற்காடு, பிச்சாவரம், குற்றாலம் மற்றும் வாலாங்குளம் ஆகிய 9 இடங்களில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இயக்கி வருகிறது.

### 24.1. முட்டுக்காடு படகு குழாம்

முட்டுக்காடு படகு குழாமானது, சென்னையில் வசிக்கும் மக்களின் வார விடுமுறை நாட்களைக் கழிப்பதற்கு மிகச் சிறந்த பொழுதுபோக்குத் தலமாக விளங்குகிறது. முட்டுக்காடு உப்பங்கழியில்

அமைந்துள்ள இந்த படகு குழாமில், சாகச நீர் விளையாட்டுகள் மெய் சிலிர்க்கும் அனுபவத்தைத் தருகின்றன. சுற்றுலாப் பயணிகள் நாள் முழுவதும் செலவிடக்கூடிய வகையில் இயந்திரப் படகு, துடுப்புப் படகு, விரைவுப் படகு மற்றும் வாட்டர் ஸ்கூட்டர் போன்ற படகுகள் உள்ளன. சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்காக நீர் மிதிவண்டி மற்றும் குழந்தைகளுக்கான மிதிப்படகும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், இந்தாண்டு ஐந்து எண்ணிக்கையில் 8 இருக்கைகள் கொண்ட புதிய இயந்திரப் படகுகள் சுற்றுலாப் பயணிகளின் தேவைக்காக வாங்கப்பட்டன. 2022-2023 ஆம் ஆண்டு முட்டுக்காடு படகு குழாம் மூலம் ரூ. 485.82 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

### 24.2. முதலியார்குப்பம் படகு குழாம்

ஓடியூர் உப்பங்கழி ஏரியில் அமைந்துள்ள முதலியார்குப்பம் படகு குழாம் "மழைத்துளி படகு குழாம்" என்றும் அழைக்கப்படுகிறது. மிகவும்

இயற்கையான சூழலில் அமையப்பெற்று, பறவைகளைப் பார்வையிடுவோரின் சொர்க்கமாகவும், சுற்றுலாப் பயணிகள் புத்துணர்வு பெறும் தலமாகவும் விளங்குகிறது. இந்த படகு குழாமானது சென்னையிலிருந்து 92 கி.மீ. தொலைவிலும் மாமல்லபுரத்திற்கு தெற்கே 36 கி.மீ தொலைவிலும் அமைந்துள்ளது.

இங்கிருந்து வண்ணமயமானக் கடற்கரைத் தீவிற்கு இயந்திர படகு மூலம் சென்று வர ஏற்பாடு செய்து தரப்படுகின்றது. சுற்றுலாப் பயணிகள் இந்த தீவில் சில மணி நேரம் தங்கி இயற்கைச் சூழலைக் கண்டுகளிக்கும் வகையில் வசதி செய்யப்பட்டுள்ளது இந்த படகு குழாமின் சிறப்பம்சமாகும். படகில் பயணிக்கும்போது புலம்பெயர் பறவைகளைக் கண்டுகளித்தும், படகு குழாம் உணவகத்தில் சுவையான கடல் உணவுகளை உண்டு சுவைத்தும் மகிழலாம். நீர் விளையாட்டு வசதிகள் கொண்ட முதலியார்குப்பம் படகு குழாமில் விசைப்படகு,

மிதிப்படகு, ஓரிருக்கைப் படகு (Kayak), வாழைப்பழ வடிவிலான படகு, இயந்திரப் படகு மற்றும் அதிவேக ஜெட் ஸ்கி (Jet Ski) வாட்டர் ஸ்கூட்டர் படகுகள் உள்ளன. மேலும், சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்காக புதிய வகையான கேனோ துடுப்புப் படகு (Canoe Boat) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்கும் வண்ணம், சுற்றுச்சூழலுக்கு உகந்த நீர் விளையாட்டுகள் அமைக்கப்பட்டு முதலியார்குப்பம் படகு குழாமானது தனித்துவமான பொழுதுபோக்குத் தலமாக மேம்படுத்தப்பட்டு வருகிறது. 2022-2023 ஆம் ஆண்டு முதலியார்குப்பம் படகு குழாம் மூலம் ரூ.117.20 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

**24.3. உதகமண்டலம் படகு குழாம்**

"மலைகளின் ராணி" என்று அழைக்கப்படும் உதகமண்டலத்தின் மையப் பகுதியில் 85 ஏக்கர்

பரப்பளவில் உள்ள ரம்மியமான உதகமண்டல ஏரியில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வண்ணம் படகு குழாம் அமைந்துள்ளது. இந்த படகு குழாமில் மிதிப் படகு, துடுப்புப் படகு மற்றும் விசைப்படகு போன்ற படகுகள் பிரதான சுற்றுலா அம்சமாக உள்ளன. மேலும், படகு குழாமில் நாவிற்கு இனிய சுவையான உணவு வகைகளை வழங்கும் உணவகமும் உள்ளது. நீர் விளையாட்டுகளுடன் அழகான பூங்காவும், இயற்கை எழில் சூழல்களை கண்டுகளிக்க சிறிய தொடர்வண்டி வசதியும் இந்த படகு குழாமிற்கு மேலும் மெருகூட்டுகின்றன. மாநிலத்தில் சாகசச் சுற்றுலாவினை ஊக்குவிக்கவும், மேம்படுத்தவும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், உதகமண்டலம் படகு இல்லத்தில் கூடாரம் அமைத்து சாகச மற்றும் சுற்றுச்சூழல் முகாம்கள் மூலமாகச் சுற்றுலாப் பயணிகளுக்கு மாற்றுப் பொழுதுபோக்கு அம்சங்களை ஏற்படுத்தவுள்ளது. 2022−2023 ஆம் ஆண்டு

உதகமண்டலம் படகு குழாம் மூலம் ரூ. 1375.95 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

**24.4. பைக்காரா படகு குழாம்**

உதகமண்டலம் – மைசூர் சாலையில் உதகமண்டலத்திலிருந்து 21 கி.மீ தொலைவில் அடர்ந்த காடுகளின் நடுவே பைக்காரா நீர்த்தேக்கம், எழில் கொஞ்சும் சூழலில் அமைந்துள்ளது. இந்த நீர்த்தேக்கம் அதிக அளவில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் சுற்றுலா மையமாக அமைந்துள்ளது. இங்கு இயந்திரப் படகு, அதிவேகப் படகு போன்ற படகுகள் மற்றும் உணவகம் ஆகியவை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் இயக்கப்படுகின்றன. இந்த படகுச் சவாரி, பைக்காரா பகுதியின் இயற்கை எழிலை முழுமையாக அனுபவிக்க ஏதுவாக உள்ளது. இங்கு உள்ள உணவகத்தில் சுவையானச் சிற்றுண்டிகள் மற்றும் தின்பண்டங்கள் வழுங்கப்படுகின்றன. இந்தாண்டு சுற்றுலாப் பயணிகளின் கூடுதல் வசதிக்காக இரண்டு புதிய இயந்திரப் படகுகள்

வாங்கப்பட்டுள்ளன. 2022-2023 ஆம் ஆண்டு பைக்காரா படகு குழாம் மூலம் ரூ. 390.00 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

**24.5 கொடைக்கானல் படகு குழாம்**

"மலைகளின் இளவரசி" என்று அழைக்கப்படும் கொடைக்கானல், ஒரு சிறந்த சுற்றுலாத் தலமாகும். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இங்கு இரண்டு படகு குழாம்களை நடத்துகிறது. சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வண்ணமாக, 59 ஏக்கர் நிலப்பரப்பில் நட்சத்திர வடிவிலான ஏரியில் இப்படகு இல்லம் அமைந்துள்ளது. மேலும், நவீன நீர்சாகச விளையாட்டு உபகரணங்களான நீர்மிதிவண்டி (Water Cycle) மற்றும் கேனோ துடுப்புப் படகு (Canoe Boat) ஆகியவை சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 2022-2023 ஆம் ஆண்டு கொடைக்கானல் படகு குழாம் மூலம் ரூ. 452.98 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

## 24.6. ஏற்காடு படகு குழாம்

கிழக்குத் தொடர்ச்சி மலைகளின், சேர்வராயன் மலைத் தொடரில் "தென்னகத்தின் அணிகலன்" என அழைக்கப்படும் ஏற்காடு அமைந்துள்ளது. தொலை தூரங்களிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் முக்கிய சுற்றுலாத் தலமாக, 28.40 ஏக்கர் பரப்பளவில் ஏற்காடு ஏரி அமைந்துள்ளது. மனதைக் கொள்ளை கொள்ளும் இந்த ஏரியில் மிதிப் படகு, துடுப்புப் படகு மற்றும் விசைப்படகு போன்ற படகுகள் உள்ளன. தற்பொழுது சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்காக இரண்டு மற்றும் நான்கு இருக்கைகள் கொண்ட அன்னப்பறவை வடிவிலான நவீன மிதிப்படகுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 2022–2023 ஆம் ஆண்டு ஏற்காடு படகு குழாம் மூலம் ரூ.364.17 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

**24.7 பிச்சாவரம் படகு குழாம்**

பெரிய அலையாத்திக் காடுகள் சூழ்ந்துள்ள பிச்சாவரம், சுற்றுலாத் தலமாகவும், புலம் பெயரும் பறவைகளின் புகலிடமாகவும் திகழ்கிறது. பிச்சாவரம் படகு குழாம் சுமார் 5.27 ஏக்கர் பரப்பளவில் அலையாத்திக் காடுகளின் மத்தியில் இயற்கை எழில் கொஞ்சும் காட்சிகளை ரசித்த வண்ணம் படகுச் சவாரியை அனுபவிக்க உகந்த இடமாக உள்ளது. தற்பொழுது பிச்சாவரம் படகு குழாமில் உள்ள உணவகம் மற்றும் சமையல் அறையை சுற்றுலாப் பயணிகளின் பயன்பாட்டிற்காக புனரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2022–2023 ஆம் ஆண்டு பிச்சாவரம் படகு குழாம் மூலம் ரூ.466.87 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

**24.8 குற்றாலம் படகு குழாம்**

"தென்னகத்தின் நீருற்று" (Spa of South India) என்று அழைக்கப்படும் தென்காசி மாவட்டத்தில் உள்ள

குற்றாலம், மேற்குத் தொடர்ச்சி மலையில் அழகுற அமைந்துள்ளது. இது கண்களைக் கவரும் இயற்கை எழில்மிகும் காட்சிகள் மற்றும் அருவிகள் நிறைந்த சுற்றுலாத் தலமாக தென்னகத்தில் அமைந்துள்ளது. குற்றாலத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் ஜூன், ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாத பருவகாலத்தின் போது சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக படகுச் சவாரி வசதி செய்யப்படுகின்றது. இங்கு துடுப்புப் படகு, மிதிப் படகு மற்றும் ஓரிருக்கைப் படகு போன்ற படகுகள் உள்ளன.

**24.9 வாலாங்குளம் படகு குழாம்**

20 ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு புதிய படகு குழாம் 24.08.2022 அன்று வாலாங்குளம் ஏரியில் திறக்கப்பட்டது. பறவை மற்றும் இயற்கை ஆர்வலர்களுக்கு விருப்பமான கோயம்புத்தூரில் உள்ள முக்கிய சுற்றுலாத் தலங்களில் ஒன்றாக விளங்கும் வாலாங்குளம் ஏரியில் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக ஒரு புதிய பான்டுன் படகு (Pontoon Boat)

மற்றும் ஜெட் ஸ்கி (Jet ski) வாங்கப்பட்டுள்ளது. 2022-2023 ஆண்டு வாலாங்குளம் படகு குழாம் மூலம் ரூ.29.85 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

**24.10 தொலைநோக்கி இல்லம்**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், உதகமண்டலத்தில் உள்ள தொட்டபெட்டாவிலும், கொடைக்கானல் மற்றும் ஏற்காடு ஆகிய மலைவாழிடங்களிலும் தொலைநோக்கி இல்லங்களை இயக்கி வருகிறது. பரந்து விரிந்த இயற்கை எழில் கொண்ட காட்சிகளையும் பள்ளத்தாக்குகளையும் கண்டுகளிக்க ஏதுவாக உள்ள தொலைநோக்கி இல்லங்கள், அதிக அளவில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கின்றன. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக நிதியின் மூலம் தொட்டபெட்டா தொலைநோக்கி இல்லச் சிற்றுண்டிக் கூடம் புதுப்பிக்கப்பட்டுள்ளது. 2022-2023-ஆம் ஆண்டு தொலைநோக்கி இல்லம் மூலம் ரூ.299.55 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

### 24.11 கோவளம் நீலக்கொடி கடற்கரை

கோவளம் கடற்கரை சென்னையிலிருந்து 40 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. இந்த கோவளம் கடற்கரை டென்மார்க்கைச் சேர்ந்த சுற்றுச்சூழல் கல்விக்கான அறக்கட்டளையின் மூலம் நீலக்கொடி சான்றிதழ் பெற்ற தமிழ்நாட்டின் முதல் மற்றும் இந்தியாவில் 9 வது கடற்கரை என்ற பெருமையைப் பெற்றுள்ளது. உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட தரநிலைகளை பூர்த்தி செய்யும் தூய்மையான, நன்கு நிர்வகிக்கப்படும் கடற்கரைகள் மற்றும் கடலோரப் பகுதிகளுக்கு நீலக்கொடி சுற்றுச்சூழல் தரக்குறியீடு வழங்கப்படுகிறது. சுற்றுச்சூழலுக்கு உகந்த சூழல், பாதுகாப்பு சேவைகள், நீரின் தரம், கல்வி, அணுகும் வசதிகள் ஆகியவை இந்த தரச்சான்றிதழ் தகுதிக்கான அளவுகோல்களாகும்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 23.10.2021 அன்று செங்கல்பட்டு மாவட்ட நிர்வாகத்திடமிருந்து

நீலக்கொடி கடற்கரையின் பராமரிப்பு மற்றும் செயல்பாடுகளை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றுள்ளது.

கோவளம் கடற்கரையின் பாதுகாப்பு கண்காணிப்பு வசதிகள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கான பாதுகாப்பான நீச்சல் பகுதி, ஆடை மாற்றும் பகுதி, குடிநீர் வசதி, வெளிப்புற உடற்பயிற்சி உபகரணங்கள், குழந்தைகளுக்கான விளையாட்டுப் பூங்கா, சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வண்ணம் மூங்கிலால் செய்யப்பட்ட நாற்காலிகள், ஊஞ்சல் படுக்கைகள், நிழற் குடைகள், கழிப்பறைத் தொகுதிகள் மற்றும் குப்பைத் தொட்டிகள் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும், சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் உயிர்காப்புக் காவலர்கள், மேலிருந்து கண்காணிப்பதற்காக கண்காணிப்புக் கோபுரம் மற்றும் அவசரக்கால உதவிக்காக முதலுதவி உதவியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், நீலக்கொடி கடற்கரையைச் சிறந்த பொழுதுபோக்குத் தலமாக

பிரபலப்படுத்துவதற்காகப் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதில் ஒரு பகுதியாக கடற்கரைக் கைப்பந்து போட்டிகள், 'கடற்கரை யோகாசனம்' மற்றும் கடற்கரையைச் சுத்தம் செய்வது போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. 2022-2023 ஆம் ஆண்டு கோவளம் நீலக்கொடிக் கடற்கரை மூலம் ரூ. 178.98 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

## 25. விற்பனை மற்றும் போக்குவரத்துப் பிரிவு

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலா வளங்களைச் சுற்றுலாப் பயணிகள் கண்டு களிப்புறும் வகையில் பல்வேறு தொகுப்புப் பயணங்களை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு சொந்தமாக 14 சொகுசுப் பேருந்துகள் உள்ளன. அதில் 35 இருக்கைகள் கொண்ட குளிர்சாதனப் பேருந்துகள்-4, 35 இருக்கைகள் கொண்ட குளிர்சாதன வசதி அல்லாத பேருந்துகள்-3, 18 இருக்கைகள் கொண்ட

குளிர்சாதன பேருந்துகள்–3, 45 இருக்கைகள் கொண்ட குளிர்சாதன வால்வோ பேருந்து–1, 43 இருக்கைகள் கொண்ட குளிர்சாதன வால்வோ பேருந்துகள்–3 என சொகுசுப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சொகுசுப் பேருந்துகளின் எண்ணிக்கையை மேலும் உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலம் நடத்தப்படும் சுற்றுலாக்களில் ஒருநாள் திருப்பதி சுற்றுலா, 3 நாட்கள் நவக்கிரகச் சுற்றுலா, 8 நாட்கள் தமிழ்நாடு சுற்றுலா மற்றும் 8 நாட்கள் கிழக்கு–மேற்கு கடற்கரைச் சுற்றுலா ஆகியவை சுற்றுலாப் பயணிகளிடையே மிகவும் புகழ்பெற்ற சுற்றுலாக்களாகும்.

## 25.1 தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தொகுப்புப் பயணச் சுற்றுலாக்கள்:

### 25.1.1 திருப்பதி சுற்றுலா

பொதுமக்களின் அமோக வரவேற்பினைப் பெற்ற சென்னை–திருப்பதி ஒருநாள் தினசரி சுற்றுலாவை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இயக்கி வருகிறது. இச்சுற்றுலாவினை இணையவழி முன்பதிவு மூலம் பதிவு செய்து திருமலை திருப்பதி தேவஸ்தான கணினியுடன் இணைக்கப்பட்டு விரைவு தரிசனத்திற்கான முன்பதிவு செய்யப்பட்டு வருகிறது.

சென்னையிலிருந்து தினசரி 150 விரைவு தரிசன சீட்டுகளைப் பெற்று இயக்கப்பட்டு வந்த இச்சுற்றுலா, பொதுமக்களின் தேவையைக் கருத்தில் கொண்டு தினசரி 1000 விரைவு தரிசன சீட்டுகளாக உயர்த்தப்பட்டுள்ளது. சென்னை மாநகரம் மட்டும் இல்லாமல் தமிழ்நாட்டில் உள்ள பிற நகரங்களான திருச்சி, கோவை, மதுரை, சேலம், ஒசூர் மற்றும்

கடலூரில் இருந்து சுற்றுலாப் பயணிகள் பயன்பெறும் வகையில் தினசரி இச்சுற்றுலாவை இயக்கி வருகிறது.

**25.1.2. ஆன்மீகச் சுற்றுலா**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் சுற்றுலா மேற்கொள்ளும் பயணிகள் இந்து சமய அறநிலையங்கள் துறை கட்டுப்பாட்டில் உள்ள முக்கியமான 33 திருக்கோவில்களில் உடனடி சிறப்பு தரிசனம் மேற்கொள்ள சிறப்பு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**25.1.3. பிற தொகுப்பு சுற்றுலாக்கள்**

2022–2023 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட புதிய சுற்றுலாக்களை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அறிமுகப்படுத்தியுள்ளது:–

1. **அம்மன் மற்றும் பெருமாள் திருக்கோவில்கள் சிறப்பு தரிசனச் சுற்றுலா:**

ஆடிமாத அம்மன் மற்றும் புரட்டாசி மாத பெருமாள் திருக்கோவில்கள் சிறப்பு தரிசனச் சுற்றுலா ஆகியவை ஆன்மீகப் பயணிகளை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின்பால் கவரும் வகையில்

நடத்தப்பட்டு வருகிறது. இந்து சமய அறநிலையங்கள் துறையோடு இணைந்து ஆடி மாதத்தில் ஒருநாள் அம்மன் திருக்கோவில்கள் சிறப்புச் சுற்றுலா மற்றும் புரட்டாசி மாதங்களில் ஒருநாள் பெருமாள் திருக்கோவில்கள் சிறப்பு தரிசனச் சுற்றுலாவினை மதுரை, திருச்சி, தஞ்சாவூர் மற்றும் சென்னை ஆகிய நகரங்களிலிருந்து இயக்கியதன் மூலம் பொதுமக்களின் அமோக வரவேற்பினை ஈர்த்துள்ளது.

**2. பொன்னியின் செல்வன் சுற்றுலா**

வரலாற்றுச் சிறப்புமிக்க "பொன்னியின் செல்வன்" என்ற நாவலில் இடம்பெற்றுள்ள சோழப் பேரரசின் வரலாற்றுத் தடங்களை சுற்றுலாப் பயணிகள் கண்டுகளிக்கும் வகையில் "பொன்னியின் செல்வன் சுற்றுலா" என்ற சிறப்புமிக்க வரலாற்றுச் சுற்றுலாவினை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அறிமுகப்படுத்தி இயக்கி வருகிறது.

### 3. யுனெஸ்கோவினால் அங்கீகரிக்கப்பட்ட புராதனச் சின்னங்களைக் காணும் சுற்றுலா

மாமல்லபுரத்திலுள்ள புராதன நினைவுச் சின்னங்கள் மற்றும் சோழப் பேரரசின் வரலாற்றுத் தொன்மை மிக்க புராதனக் கல்வெட்டுகள், கோவில்கள் மற்றும் சிற்பங்களை சுற்றுலாப் பயணிகள் கண்டுகளிக்கும் வண்ணம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் யுனெஸ்கோவால் அங்கீகரிக்கப்பட்ட புராதனச் சின்னங்கள் நிறைந்த மாமல்லபுரம் மற்றும் சோழ மண்டலச் சுற்றுலாவினை அறிமுகப்படுத்தியுள்ளது.

### 4. புராதன நடை பயணம்

புராதனங்களை மையக்கருவாகக் கொண்டு பல்வேறு நடை பயணச் சுற்றுலாக்கள் சென்னையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் நடத்தப்பட்டு வருகிறது. இதன் காரணமாக பொதுமக்கள் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களின் பெருமைகளை உணரும் வகையில் உள்ளது.

**5. சென்னையில் உள்ள தேவாலயங்களைக் காணும் சுற்றுலா**

சென்னையில் உள்ள பல்வேறு தேவாலயங்களை, பொதுமக்கள் கண்டுகளிக்கும் வகையில் வழிகாட்டியுடன் கூடிய தேவாலயச் சுற்றுலாவினை அறிமுகப்படுத்தியுள்ளது.

**6. ஐந்துநாள் சமண மதச் சுற்றுலா**

தமிழ்நாட்டில் சமண சமயம் தொடர்புடைய இடங்கள் அதிகம் உள்ளன. இந்த இடங்களைப் பிரபலப்படுத்தி, சுற்றுலாப் பயணிகள் அதிகம் வரும் வகையில் 5 நாள் சிறப்பு சமண சுற்றுலாவினை அறிமுகப்படுத்தியுள்ளது.

**25.2. இதர முன் முயற்சிகள்**

**1. சென்னை – மோட்டார் வாகனப் பேரணி**

போதைப் பொருட்களின் பயன்பாட்டை எதிர்க்கும் வகையில் விழிப்புணர்வு மோட்டார் வாகன பேரணியை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமானது திருவாளர்கள் ஆக்சண்டி எண்டர்டெயின்மெண்ட்

(M/s Axandy Entertainment) என்ற தனியார் நிறுவனத்துடன் இணைந்து 25.02.2023 அன்று சென்னை தீவுத்திடலிருந்து முதலியார்குப்பம் படகு குழாம் வரை நடத்தியது.

2. **44-வது சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டியாளர்களுக்கான சிறப்புச் சுற்றுலா**

உயர்ந்த பாரம்பரியம் மற்றும் பண்பாடு வாய்ந்த மாமல்லபுரம் புராதனச் சின்னங்கள் மற்றும் சென்னை மாநகரின் சிறப்புகள் குறித்து உலகம் முழுவதும் இருந்து வருகை தந்த சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டியாளர்கள் அறிந்து கொள்ளும் வகையில் ஒருநாள் சிறப்பு சென்னை-மாமல்லபுரம் சுற்றுலாக்கள் இயக்கப்பட்டன.

3. **எங்கும் ஏறலாம் – எங்கும் இறங்கலாம் (Hop on Hop off)**

44-வது சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டியையொட்டி பொதுமக்கள் மற்றும் போட்டியாளர்கள் வசதிக்காக சோழமண்டலம் கலை

கிராமத்தில் இருந்து மாமல்லபுரத்தில் போட்டி நடைபெற்ற இடம் வரை எந்த இடத்திலும் ஏறி, எந்த இடத்திலும் இறங்கலாம் என்ற வசதியைக் கொண்ட" எங்கும் ஏறலாம் – எங்கும் இறங்கலாம்" என்ற பேருந்து சேவையை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இயக்கியது. இந்த சேவையினைப் பயன்படுத்தி பொதுமக்கள் மற்றும் செஸ் ஒலிம்பியாட் போட்டிக்கு வருகை புரிந்த போட்டியாளர்கள் மிகவும் விரும்பி பயணம் செய்தார்கள்.

## 26. அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் கூடிய திட்டங்கள்

தமிழ்நாட்டின் சுற்றுலா உட்கட்டமைப்பு வசதியைப் பெருக்குவதிலும், சுற்றுலாத் தொழில் முன்னேற்றத்திலும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் முக்கிய பங்களிப்பை வழங்கி வருகிறது. தனியார் மற்றும் அரசுத் துறைகளின் வளங்களை மேலும் வலுப்படுத்துவதற்கு, அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் கூடிய திட்டங்களைச் (PPP)

செயல்படுத்த முன்னெடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள்:–

1) முட்டுக்காடு படகு இல்லத்தில் மிதக்கும் உணவகம் அமைக்கப்பட்டு வருகிறது.
2) உதகை படகு இல்லத்தில் சாகச விளையாட்டுகளை மேற்கொள்வதற்கான கட்டமைப்புகள் நிறுவப்பட்டு வருகின்றன.
3) மாமல்லபுரம் மரகதப் பூங்காவில் **"ஒளிரும் பூங்கா"** அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் செயல்படுத்தப்படவுள்ள கீழ்க்கண்ட திட்டங்களின் சாத்தியக்கூறுகள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

1) ஊட்டி, கொடைக்கானல், வால்பாறை ஆகிய சுற்றுலாத் தலங்களில் கம்பிவட ஊர்தி (Rope Car) நிறுவுவதற்கான விரிவான சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன.

2) சென்னையில் "**எங்கும் ஏறலாம் எங்கும் இறங்கலாம்**" என்ற பேருந்து வசதியினை அறிமுகப்படுத்துவதற்கான விரிவான சாத்தியக்கூறு குறித்து திட்ட ஆய்வு மேற்கொள்ளபட்டுவருகிறது.

3) தமிழ்நாட்டிலுள்ள ஐந்து திருக்கோவில்களை லேசர் ஒளிக்கற்றை மூலம் மிளிரும் வகையில் அமைப்பதற்கான விரிவான சாத்தியக்கூறு பற்றியும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**27. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் வர்த்தக முன்முயற்சிகள்**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் வர்த்தகப் பிரிவு மிகச்சிறப்பான முறையில் செயல்பட்டு, தொகுப்புச் சுற்றுலாக்கள், ஓட்டல்கள் மற்றும் படகு குழாம்களின் வர்த்தகத்தைப் பெருக்கி வருகிறது. பல்வேறு வகையான உத்திகளைக் கையாண்டு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல் அறைகள் மற்றும் பல்வேறு சுற்றுலாக்களைப்

பயன்படுத்துவோர் எண்ணிக்கை மற்றும் வருவாயைப் பெருக்கியுள்ளது.

**27.1. மின்னணு மற்றும் சமூக ஊடகங்களில் விளம்பரம்**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல்கள், தொகுப்புச் சுற்றுலாக்கள் மற்றும் படகு இல்லங்களின் பயன்பாடுகளை பொதுமக்களுக்குத் தெரிவிப்பதற்காக சமூக ஊடகங்களின் மூலமாக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் செயல்பாடுகள், சுற்றுலாத் தலங்கள் குறித்த விவரங்கள் பற்றியும் இத்துறை பரப்புரை செய்து வருகின்றது.

மேலும் சமூக ஊடகங்களில் புகைப்படப் போட்டி, சிறப்புச் சலுகைகள் போன்ற பல்வேறு உத்திகளைப் பயன்படுத்திப் பொதுமக்களை அதிகளவில் சென்றடையும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சமூக வலைதளப் பக்கங்களில் திரைப்படத் திங்கள் தொடர், வினாடி வினாத் தொடர், சான்று வியாழன்கள்,

உண்மை வெள்ளித் தொடர் போன்ற பார்வையாளர்களை ஈர்க்கும் வகையிலான பல்வேறு போட்டி உத்திகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சுற்றுலாத் தலங்கள் குறித்த பார்வையாளர்களை ஈர்க்கும் வகையிலான வீடியோக்கள் உருவாக்கப்பட்டு, சமூக ஊடகங்களில் காட்சிப்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சுற்றுலாத் தலங்களை பிரபலபடுத்துவதற்குச் சமூக ஊடகத்தில் அதிகமான பின்தொடர்பவர்களைக் கொண்ட செல்வாக்குப் பெற்ற நபர்களுடன் இணைந்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 27.2 வளர்ச்சிக்கான பிற முன்னெடுப்புகள்

திருப்பதி சுற்றுலாவினை மேலும் விளம்பரப்படுத்தும் வகையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலங்கள் மற்றும் ஓட்டல்களில் விளம்பரப் பதாகைகள், சுவரொட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்

கழகத்தின் ஓட்டல்களுக்கு வருகை தரும் வாடிக்கையாளர்கள் பல்வேறு சுற்றுலாத் தொகுப்புத் திட்டங்கள் குறித்து அறிந்துகொள்ள இந்த உத்தி பயன்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல்கள் மற்றும் படகு குழாம்கள் குறித்த விளம்பரப் பதாகைகள் அதிக பார்வையாளர்களை சென்றடையும் வகையில் முக்கியமான இடங்களில் வைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் திருப்பதி சுற்றுலாப் பயணம் உட்பட வாலாங்குளம் படகு குழாம் தொடக்க விழா ஆகியவை குறித்து வானொலி மூலம் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சுங்கத்துறை, தொழிலாளர் ஈட்டுறுதி நிறுவனம் மற்றும் வருங்கால வைப்புநிதி நிறுவனம் ஆகிய துறைகளின் வைப்பு நிதி மூலமாக இந்நிறுவனங்களில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள்

தமிழ்நாடு ஓட்டல்களைப் பயன்படுத்த விடுமுறைகாலச் சலுகை திட்ட ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 28. பொருட்காட்சிப் பிரிவு

தமிழ்நாட்டின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை சுற்றுலாப் பயணிகளுக்குக் கொண்டுசேர்க்க, பொருட்காட்சிகள் மற்றும் திருவிழாக்களை நடத்துவது தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் முக்கிய செயல்பாடுகளில் ஒன்றாகும்.

### 28.1 தீவுத்திடல், சென்னை

சென்னை மாநகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தீவுத்திடல் மைதானம் ஆண்டு முழுவதும் பெரிய அளவிலான நிகழ்வுகள் மற்றும் கண்காட்சிகளை நடத்துவதற்கு பொருத்தமான இடமாக பிரபலமாகி வருகிறது. இவ்விடம் நிகழ்ச்சி

அமைப்பாளர்கள் மற்றும் பார்வையாளர்கள் நகரத்தின் எந்தப்பகுதியிலிருந்தும் எளிதில் அணுகுவதற்கு வசதியான இடத்தில் அமைந்துள்ளது. பெரிய நிகழ்ச்சிகளை நடத்துவதற்கும் தேவையான மிகப்பெரிய பரப்பிலான இடத்தைக் கொண்டுள்ளது இந்த மைதானத்தின் சிறப்புகளாகும்.

**28.1.1. 47–வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி 2023**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சென்னை தீவுத்திடலில் கடந்த 1974 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் டிசம்பர் முதல் மார்ச் வரை 70 நாட்களுக்கு இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியை நடத்தி வருகிறது. இந்த ஆண்டு 47வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி ஜனவரி மாதம் 4 ஆம் தேதி தொடங்கி மார்ச் 23 ஆம் தேதி வரை **"சுற்றுலா மறுசிந்தனை"** என்ற கருப்பொருளை

மையமாக வைத்து வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளது.

இந்த வருட பொருட்காட்சியில் தமிழ்நாடு சுற்றுலாத் துறை உள்பட 51 அரசுத் துறைகளின் அரங்குகள் இடம் பெற்றிருந்தன. இந்த கண்காட்சியில் குடும்பத்தினர் மற்றும் சிறுவர், சிறுமிகளைக் கவரும் வகையில் பல்வேறு வணிக அரங்கங்கள் மற்றும் விளையாட்டு அரங்கங்கள் இடம்பெற்று இருந்தன. இந்தாண்டு பொருட்காட்சியை சுமார் 15 இலட்சம் பார்வையாளர்கள் கண்டுகளித்துள்ளனர்.

### 28.1.2 சென்னை சங்கமம் – நம்ம ஊரு திருவிழா

தமிழ்நாட்டின் கலை, கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை உலகுக்கு தெரியப்படுத்தும் விதமாக கலை பண்பாட்டுத் துறை மற்றும் சுற்றுலாத் துறை இணைந்து இந்த வருடம் ஜனவரி 13 முதல் 17 ஆம் தேதி வரை தொடர்ந்து 5 நாட்களுக்கு **"நம்ம ஊரு திருவிழா"** வருடாந்திரக் கலைவிழாவைக்

கொண்டாடியது. இந்த திருவிழாவில் 40க்கும் மேற்பட்ட நாட்டுப்புறக் கலைகள் மற்றும் கலை வடிவங்களில் 500க்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்கேற்று பார்வையாளர்களுக்குச் சிறப்பான கலை நிகழ்ச்சிகளை வழங்கினார்கள். இந்த நிகழ்வு சென்னையில் தீவுத்திடல் உள்பட 18 இடங்களில் நடைபெற்றது. இந்த விழாவில் பார்வையாளர்கள் நமது தமிழ்நாட்டின் பாரம்பரிய உணவு வகைகளை உண்டு மகிழும் வகையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பாக உணவு அரங்குகள் அமைத்து சிறப்பாக நடத்தியது.

## 29. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மின் ஆளுமைச் செயல்திறன்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமானது மின்னாளுமைச் செயல்பாடுகள் மூலம் தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலாத் தலங்களைப் பற்றிய தகவல்களை வழங்குவதற்கும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இயக்கும் ஓட்டல்கள் மற்றும் சுற்றுலாக்களை

இணையவழி உடன் நிகழ் முன்பதிவு (Online Real Time Reservation) செய்வதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**29.1. OTA களின் பட்டியலுடன் இணைப்பு**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சேனல் மேலாளரை நியமித்து பிரபலமான ஆன்லைன் பயணத் திரட்டிகள் (OTAs) இணைய தளங்களான Makemytrip, Goibibo, Booking.com மற்றும் இதர OTAக்களில் தமிழ்நாடு ஓட்டல்களின் அறைகளை முன்பதிவு செய்ய வழிவகை மேற்கொள்ளப்பட்டுள்ளது. முன்னணி ஆன்லைன் பயணத் திரட்டிகள் (OTAs) இணையதளத்தில் தமிழ்நாடு ஓட்டல்களை பட்டியலிட்டதன் மூலம் தடையற்ற முன்பதிவிற்கும், உலகளவில் பிரபலப்படுத்தி வருவாயை அதிகரிப்பதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன் விளைவாக, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு ஆன்லைன் பயணத் திரட்டிகள் (OTAs) மூலம் 5096 முன்பதிவுகள் கிடைக்கப் பெற்றுள்ளதோடு, ஏப்ரல்

2022 முதல் பிப்ரவரி 2023 வரையிலான காலக்கட்டத்தில் ரூ.1.85 கோடி வருவாயையும் ஈட்டியுள்ளது.

## 29.2 QR குறியீடுகளைப் பயன்படுத்தி பின்னூட்ட வழிமுறை

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தனது வாடிக்கையாளர்களின் கருத்துக்களைப் பெறுவதற்காக அனைத்து ஓட்டல்களிலும், QR குறியீடுகளைப் பயன்படுத்தி பின்னூட்டச் செயல்முறை (Feedback mechanism) அமைப்பை நிறுவியுள்ளது. இது தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்களில் தங்கும் சுற்றுலாப் பயணிகளுக்குச் சிறந்த சேவைகளை வழங்குவதற்கு உதவியாக உள்ளது. ஏப்ரல் 2022 முதல் பிப்ரவரி 2023 வரை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு 1,323 வாடிக்கையாளர்களின் கருத்துக்கள் இச்சேவை மூலம் பெறப்பட்டது. வாடிக்கையாளர்களின் தேவைகள் மற்றும்

விருப்பங்களை சிறப்பாக வழங்குவதற்கு இப்பின்னூட்டச் செயல்முறை பயன்படுத்தப்படுகிறது.

**29.3 24 x 7 சுற்றுலா தகவல் உதவி (Helpline) சேவை**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சுற்றுலாப் பயணிகளுக்குத் தமிழ்நாட்டைப் பற்றிய பயணம் மற்றும் சுற்றுலாத் தொடர்பானத் தகவல்களைத் தொலைபேசி மூலம் வழங்குவதற்காக பிரத்தியேக அடிப்படையில் சுற்றுலாத் தகவல் உதவி (Helpline) சேவையை அறிமுகப்படுத்தியுள்ளது. 24 மணி நேரமும் செயல்படும் இந்த தகவல் உதவி (Helpline) சேவை, சுற்றுலாப் பயணிகளுக்கு உடனடி உதவியை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், தமிழ்நாட்டில் சுற்றுலாத் தொடர்பான பல்வேறு கேள்விகளுக்கு பதில் அளிக்கும் வகையில் இச்சேவை உள்ளது.

**29.4 ஓட்டல் மின் ஆளுமை மென்பொருள்**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமானது அனைத்து தமிழ்நாடு ஓட்டல்களின் சேவை தரத்தை

உயர்த்துவதற்கும், தரவு பகுப்பாய்வுகளை எளிதாக்குவதற்கும் ஒருங்கிணைந்த கிளவுட் (Cloud) அடிப்படையிலான ஒட்டல் மின் ஆளுமை மென்பொருள் அமைப்பை அறிமுகப்படுத்தியுள்ளது.

**29.5 தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக இணையதளத்தைப் புதுப்பித்தல்**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தனது இணயதளத்தைப் புதுப்பித்து, பயனாளிகளுக்கு எளிதில் பயன்படுத்துவதற்கு ஏதுவாக மாற்றியமைத்துள்ளது.

## 30. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் புதிய முயற்சிகள்

**30.1 டிரைவ்–இன் உணவகத்தைப் புதுப்பித்தல்**

தீவுத்திடலில் உள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் டிரைவ்–இன் உணவகமானது ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் டிரைவ்–இன் திரையரங்கம், பார்பிக்யூ நிலையம் மற்றும் தேநீர் விடுதி போன்ற பல்வேறு வசதிகளுடன் புதுப்பிக்கப்பட்டு 04.01.2023 அன்று முதல் பொதுமக்களின் பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

### 30.2 அங்கீகரிக்கப்பட்ட விற்பனை முகவர்கள்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் வணிகங்களை அதிகப்படுத்தும் வகையில் அங்கீகரிக்கப்பட்ட விற்பனை முகவர்கள் பதிவு மேற்கொள்வதற்காக வணிகத்துடன் வணிகம் என்ற புதிய திட்டம் 2022–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த விற்பனை முகவர்கள் கீழ்க்காணும் இரண்டு பிரிவுகளில் பதிவு செய்யப்படுகின்றனர்

1. ஓட்டல்கள் மற்றும் தொகுப்புப் பயணங்கள் (திருப்பதி சுற்றுலாவைத் தவிர)
2. திருப்பதி சுற்றுலாப் பயணம்

இதனை நடைமுறைப்படுதியதால் கடந்த 3 மாதங்களில் 40–க்கும் மேற்பட்ட முகவர்கள் நியமிக்கப்பட்டு, ஓட்டல்கள் மற்றும் தொகுப்புப் பயணங்களின் முன்பதிவு கணிசமாக உயர்ந்துள்ளது. இத்திட்டத்தில் உள்நாடு மற்றும் வெளிநாடுகளைச்

சேர்ந்த ஏராளமான முகவர்கள் தங்களை பதிவு செய்து கொண்டுள்ளனர்.

### 30.3 புதிய வகை படகுகள்

அதிகரித்து வரும் சுற்றுலாப் பயணிகளின் தேவையைப் பூர்த்தி செய்யவும், தனித்துவமான சிலிர்ப்பூட்டும் அனுபவத்தை வழங்கவும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினால் மாறுபட்ட, புதிய படகுகள் வாங்கப்பட்டு, படகு குழாம்களின் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளன. கேனோ துடுப்புப் படகு (Canoe Boats), நீர் மிதிவண்டி (Water cycle), குழந்தைகள் படகு, அன்னவடிவப் படகு, சோர்பின் பந்து (Zorbin ball) ஆகியவை சில புதிய வகை படகுகள் ஆகும்.

### 30.4. முன்னணிப் பயண ஏற்பாட்டாளர்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், ஓட்டல்கள் மற்றும் சுற்றுலாக்களின் வருவாயை உயர்த்தவும் தனது கட்டுப்பாட்டில் உள்ள சுற்றுலாத் தலங்களை

பிரபலப்படுத்தவும் வெளி மாநிலங்களை சேர்ந்த முன்னணிப் பயண ஏற்பாட்டாளர்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்டுள்ளது .

**31. நிறுவனத்தின் மறுசீரமைப்பு**

சமீபத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அதன் நிறுவன கட்டமைப்பை ஒரு புகழ்பெற்ற ஆலோசனை நிறுவனம் வழங்கிய பரிந்துரைகளின் அடிப்படையில் மறுசீரமைத்துள்ளது. இந்த மறுசீரமைப்புச் செயல்முறையானது சந்தைத் தேவைகள் குறித்த ஆய்வு மற்றும் தற்போதுள்ள நிறுவனக் கட்டமைப்பின் முழுமையான ஆய்வுக்கு பிறகு மேற்கொள்ளப்பட்டது. நிறுவன மறுசீரமைப்பின் ஒரு பகுதியாக, முக்கியமான தளங்களில் அனுபவம் வாய்ந்த பணியாளர்களை நியமிக்க தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிருவாகக் குழு பரிந்துரைத்தது. அதன் அடிப்படையில் நடப்பு ஆண்டில் பின்வரும் வல்லுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்:

| வ எண் | வல்லுநர்கள் |
|---|---|
| 1 | உதவி பொது மேலாளர் (உணவு மற்றும் பானங்கள்) |
| 2 | உதவி பொது மேலாளர் (பராமரிப்பு பணிகள்) |
| 3 | உதவி பொது மேலாளர் (ஆலயம் – தங்கும் விடுதி) |
| 4 | மேலாளர் (தொகுப்புச் சுற்றுலாக்கள்) |
| 5 | உதவி பொது மேலாளர் (சந்தைப்படுத்துதல் மற்றும் விற்பனை) |

## 32. முடிவுரை


தமிழ்நாடு சுற்றுலாத் துறையானது முக்கிய சுற்றுலாத் தலங்களை மேம்படுத்துவதற்கும், அதிகம் அறியப்படாத இடங்களைக் கண்டறிந்து பிரபலப்படுத்துவதற்கும் முக்கிய சுற்றுலா இனங்களில் பல்வேறு சுற்றுலாப் பங்குதாரர்களுடன் இணைந்து பணியாற்றுவதற்கும் அர்ப்பணிப்புடன் உள்ளது. புதுமையான உத்திகள் மற்றும் சுற்றுலாத் திட்டங்களைப் பயன்படுத்தி, மாநிலத்தின் சுற்றுலாத்

துறையை மேம்படுத்தவும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் ஆர்வத்துடன் சுற்றுலா மேற்கொள்ளும் இடமாக தமிழ்நாட்டை மாற்றுவதையும் தமிழ்நாடு சுற்றுலாத் துறை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**கா. ராமச்சந்திரன்**
**சுற்றுலாத்துறை அமைச்சர்**


## இணைப்பு–1

## சுற்றுலாத்துறை நிர்வாக அமைப்பு



# இணைப்பு–2

## தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக நிர்வாக அமைப்பு



# இணைப்பு–3

## சுற்றுலா அலுவலகங்கள்

## தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலா அலுவலகங்கள்

| | | |
|---|---|---|
| 1. அரியலூர் | 12. மதுரை | 23. திருவண்ணாமலை |
| 2. சென்னை | 13. மாமல்லபுரம் | 24. திருவள் ளூர் |
| 3. கோயம்புத்தூர் | 14. நாமக்கல் | 25. திருவாரூர் |
| 4. சிதம்பரம் | 15. பூம்புகார் | 26. தேனி |
| 5. தர்மபுரி | 16. புதுக்கோட்டை | 27. தூத்துக்குடி |
| 6. ஈரோடு | 17. பெரம்பலூர் | 28. திருப்பூர் |
| 7. காரைக்குடி | 18. இராமேஸ்வரம் | 29. உதகமண்டலம் |
| 8. கன்னியாகுமரி | 19. சேலம் | 30. வேலூர் |
| 9. கொடைக்கானல் | 20. திருச்சிராப்பள்ளி | 31. விருதுநகர் |
| 10. கிருஷ்ணகிரி | 21. திருநெல்வேலி | 32. விழுப்புரம் |
| 11. கரூர் | 22. தஞ்சாவூர் | |

## வெளி மாநிலங்களில் உள்ள சுற்றுலா அலுவலகங்கள்

1. புதுடெல்லி
2. ஆக்ரா
3. ஜெய்ப்பூர்
4. கொல்கத்தா
5. மும்பை
6. பனாஜி (கோவா)

## இணைப்பு–4

### சுற்றுலா தகவல் மையங்கள்

| விமான நிலையத்தில் அமைந்துள்ளவை | இரயில் நிலையத்தில் அமைந்துள்ளவை |
|---|---|
| 1. சென்னை (பன்னாட்டு முனையம்)<br>2. சென்னை (உள்நாட்டு முனையம்)<br>3. கோயம்புத்தூர்<br>4. மதுரை<br>5. திருச்சிராப்பள்ளி<br>6. தூத்துக்குடி<br>7. சேலம் | 1. சென்னை (எழும்பூர்)<br>2. கோயம்புத்தூர்<br>3. மதுரை<br>4. திருச்சிராப்பள்ளி<br>5. திருநெல்வேலி |
| **பேருந்து நிலையத்தில் அமைந்துள்ளவை** | **பிற இடங்களில் அமைந்துள்ளவை** |
| 1. சென்னை (கோயம்பேடு) | 1. கூடலூர் (நீலகிரி மாவட்டம்)<br>2. இராமேஸ்வரம் (கோவில் வளாகம்)<br>3. தஞ்சாவூர் (ஓட்டல் தமிழ்நாடு)<br>4. பாஞ்சாலங்குறிச்சி (தூத்துக்குடி மாவட்டம்) |

**சுற்றுலா தகவல் மையங்கள்**
**வெளிமாநிலங்களில் அமைந்துள்ளவை**

1. பெங்களூரு இரயில் நிலையம் (கர்நாடக மாநிலம்)
2. ஐதராபாத் (ஆந்திர மாநிலம்)
3. திருவனந்தபுரம் (கேரள மாநிலம்)
4. அகமதாபாத் (குஜராத் மாநிலம்)
5. புவனேசுவரம் (ஒடிசா மாநிலம்)



21.03.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களை தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. கா. ராமச்சந்திரன் அவர்கள் சந்தித்து, ஜெர்மன் நாட்டின் தலைநகர் பெர்லினில் பசிபிக் பகுதி பயண எழுத்தாளர்கள் சங்கத்தின் (Pacific Area Travel Writers Association) சார்பில் 8.03.2023 அன்று நடைபெற்ற பட்வா சர்வதேச பயண விருது (PATWA International Travel Awards) வழங்கும் விழாவில், தமிழ்நாட்டின் சுற்றுலாத் துறைக்கு வழங்கப்பட்ட பாரம்பரிய சுற்றுலா இலக்கிற்கான விருது மற்றும் இந்தியாவில் சிறந்த சுற்றுலாத் துறை அமைச்சருக்காக தனக்கு வழங்கப்பட்ட விருது ஆகிய விருதுகளை காண்பித்து வாழ்த்துப் பெற்றார். உடன் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மை செயலாளர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் டாக்டர். சந்தர மோகன் B . இ.ஆ.ப., சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., ஆகியோர் உள்ளனர்.



4.6.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் சென்னை துறைமுகத்தில், கார்டிலியா குருசஸ் (Cordelia Cruises) நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கடல்வழி எம்பிரஸ் சொகுசு கப்பல் சுற்றுலாப் பயணத்தை தொடங்கி வைத்து, அக்கப்பலை பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் அவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் திரு.தயாநிதிமாறன், அரசு உயர் அலுவலர்கள், கார்டிலியா குருசஸ் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள், நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



4.6.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் சுற்றுலா பயணத்தை துவக்கி வைத்த, கார்டிலியா குருசஸ் (Cordelia Cruises) நிறுவனத்தின் கடல்வழி சுற்றுலாப் பயண எம்பிரஸ் சொகுசு கப்பல்.




4.6.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் சென்னை துறைமுகத்தில், கார்டிலியா குருசஸ் (Cordelia Cruises) நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கடல்வழி எம்பிரஸ் சொகுசு கப்பல் சுற்றுலாப் பயணத்தை தொடங்கி வைக்கும் விதமாக அதற்கான கேடயத்தினை கப்பல் கேப்டன் திரு.டேனிஸ் கொரூப் அவர்களிடம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் அவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் திரு.தயாநிதிமாறன், அரசு உயர் அலுவலர்கள், கார்டிலியா குருசஸ் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள், நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




27.09.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமைச் செயலகத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை சார்பில் திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு ஓட்டலில் கட்டப்பட்டுள்ள தங்கும் விடுதி மற்றும் கூட்டரங்கம், கடலூர் மாவட்டம், சிதம்பரம் நகரில் கட்டப்பட்டுள்ள சுற்றுலா அலுவலகக் கட்டடம் மற்றும் மதுரை, கோரிப்பாளையத்தில் அமைந்துள்ள தர்காவில் மேற்கொள்ளப்பட்டுள்ள உட்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலகத்திலிருந்து மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, இ.ஆ.ப., அவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




22.12.2022 அன்று செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் உயிரியல் பூங்காவில் புதுப்பிக்கப்பட்ட தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் உணவகத்தை மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு.கா.ராமச்சந்திரன் அவர்கள், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் டாக்டர். மா.மதிவேந்தன் அவர்கள் ஆகியோர் திறந்து வைத்தனர். இந்நிகழ்ச்சியில் செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் திருமதி.வரலட்சுமி மதுசூதனன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




22.12.2022 அன்று செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் உயிரியல் பூங்காவில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் குயிக் பைட்ஸ் சிற்றுண்டியகத்தை மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா. மோ. அன்பரசன் அவர்கள், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. கா. ராமச்சந்திரன் அவர்கள், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் டாக்டர். மா. மதிவேந்தன் அவர்கள் ஆகியோர் திறந்து வைத்தனர். இந்நிகழ்ச்சியில் செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் திருமதி.வரலட்சுமி மதுசூதனன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



23.12.2022 அன்று செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரத்தில் சுற்றுலாத்துறையின் சார்பில் நடைபெற்ற இந்திய நாட்டிய விழாவினை மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. கா. ராமச்சந்திரன் அவர்கள் ஆகியோர் துவக்கி வைத்து பார்வையிட்டார்கள். செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் திருமதி. வரலட்சுமி மதுசூதனன், திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். எஸ். பாலாஜி அவர்கள், தாம்பரம் மாநகராட்சி மேயர், திருமதி. வசந்தகுமாரி கமலக்கண்ணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




31.01.2023 அன்று செங்கல்பட்டு மாவட்டம், கோவளம் நீலக்கொடி கடற்கரையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்தின் குயிக் பைட்ஸ் சிற்றுண்டியகத்தை மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. கா. ராமச்சந்திரன் அவர்கள் திறந்து வைத்தார். சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திரு. சந்தீப் நந்தூரி இ.ஆ.ப., அவர்கள் உடன் உள்ளார்.



4.01.2023 அன்று சென்னை, தீவுத்திடல், அறிஞர் அண்ணா கலையரங்கில் 47-வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியை மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. கா. ராமச்சந்திரன் அவர்கள், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள் ஆகியோர் திறந்து வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தயாநிதி மாறன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மை செயலாளர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் டாக்டர். சந்தர மோகன் B. இ.ஆ.ப., சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திரு. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

X



4.01.2023 அன்று சென்னை, தீவுத்திடல், அறிஞர் அண்ணா கலையரங்கில் 47-வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியை மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. கா. ராமச்சந்திரன் அவர்கள், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள் ஆகியோர் திறந்து வைத்து அரங்குகளை பார்வையிட்டார்கள். பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தயாநிதி மாறன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



14.01.2023 அன்று கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சியில் தமிழ்நாடு சுற்றுலாத் துறையின் சார்பில் உலக சுற்றுலா பயணிகளின் கவனத்தை ஈர்க்கும் வகையில் தமிழ்நாடு சர்வதேச பலூன் திருவிழா மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. கா. ராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கு. சண்முகசுந்தரம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




15.01.2023 அன்று கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சியில் தமிழ்நாடு சுற்றுலாத் துறையின் சார்பில் நடைபெற்ற தமிழ்நாடு சர்வதேச பலூன் திருவிழாவில் மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. கா. ராமச்சந்திரன் அவர்கள் பலூனில் பயணம் செய்தார். சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறையின் அரசு முதன்மை செயலாளர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் டாக்டர். சந்தர மோகன் B. இ.ஆ.ப., உடன் உள்ளார்.



7.03.2023 அன்று ஜெர்மன் நாட்டின் தலைநகரான பெர்லின் நகரில் நடைபெற்ற சர்வதேச சுற்றுலா சந்தையில் (INTERNATIONAL TOURISM BOURSE - 2023) அமைக்கப்பட்ட தமிழ்நாடு சுற்றுலாத்துறையின் அரங்கினை மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.கா.ராமச்சந்திரன் அவர்கள் திறந்து வைத்து, அரங்கிற்கு வருகை தந்த வெளிநாட்டு பிரதிநிதிகள் மற்றும் சுற்றுலா பயணிகளுடன் கலந்துரையாடினார். இந்நிகழ்ச்சியில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மை செயலாளர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தலைவர் டாக்டர். சந்தர மோகன் B. இ.ஆ.ப., சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழக மேலாண்மை இயக்குநர் திரு. சந்தீப் நந்தூரி இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.



7.03.2023 அன்று ஜெர்மன் நாட்டின் தலைநகரான பெர்லின் நகரில் நடைபெற்ற சர்வதேச சுற்றுலா சந்தையில் (INTERNATIONAL TOURISM BOURSE - 2023) அமைக்கப்பட்ட தமிழ்நாடு சுற்றுலாத் துறையின் அரங்கில் மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. கா. ராமச்சந்திரன் அவர்கள் தமிழ்நாட்டின் சுற்றுலாத்தலங்களின் சிறப்புகளை ஜெர்மன் மொழியில் விளக்கத்துடன் தெரிவிக்கும் புகைப்படங்கள் அடங்கிய புத்தகத்தினை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மை செயலாளர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தலைவர் டாக்டர். சந்தர மோகன் B . இ.ஆ.ப., சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழக மேலாண்மை இயக்குநர் திரு. சந்தீப் நந்தூரி இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.



8.3.2023 அன்று ஜெர்மன் தலைநகர் பெர்லினில் நடைபெற்ற பசிபிக் பகுதி பயண எழுத்தாளர்கள் சங்க விருதுகள் வழங்கும் விழாவில் இந்திய அளவில் சிறந்த சுற்றுலா அமைச்சருக்கான பட்வா சர்வதேச பயண விருதினை ஜமைக்கா நாட்டின் மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. ஹெச். இ. எட்மண்ட் பார்ட்லெட் அவர்களிடமிருந்து, மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. கா. ராமச்சந்திரன் அவர்கள் பெற்றுக் கொண்டார். இந்நிகழ்ச்சியில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மை செயலாளர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தலைவர் டாக்டர். சந்தர மோகன் B . இ.ஆ.ப., சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழக மேலாண்மை இயக்குநர் திரு. சந்தீப் நந்தூரி இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.



13.03.2023 அன்று செக் குடியரசின் தலைநகர் பிராக்கில் செக் குடியரசின் மண்டல மேம்பாட்டு அமைச்சகத்தின் துணை அமைச்சர், திரு. ஜான் ஃப்ளூக்சா அவர்கள் தலைமையிலான குழுவினரை மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. கா. ராமச்சந்திரன் அவர்கள் நேரில் சந்தித்து தமிழ்நாட்டின் சுற்றுலா சிறப்புகள் குறித்த புத்தகங்களை வழங்கி, தமிழ்நாட்டில் சுற்றுலா மேற்கொள்ள அழைப்பு விடுத்தார். இந்நிகழ்வில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மை செயலாளர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தலைவர் டாக்டர். சந்தர மோகன் B . இ.ஆ.ப., சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழக மேலாண்மை இயக்குநர் திரு. சந்தீப் நந்தூரி இ.ஆ.ப., மற்றும் செக் குடியரசின் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



23.03.2023 அன்று சென்னை தீவுத்திடலில் நடைபெற்ற 47-வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியின் நிறைவு விழாவில், தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகளை விளக்கும் வகையில் அமைக்கப்பட்ட சிறந்த அரங்குகளுக்கு, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. கா. ராமச்சந்திரன் அவர்கள், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்ரமணியன் அவர்கள் ஆகியோர் பரிசுகளை வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



28.03.2023 அன்று புதுதில்லியில் ஒன்றிய அரசின் சுற்றுலா அமைச்சகத்தின் சார்பில் நடைபெற்ற ஒருங்கிணைப்பு மற்றும் பொது தனியார் துறை கூட்டாண்மை குறித்த தேசிய பயிலரங்கத்தில், மாண்புமிகு ஒன்றிய சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. ஜி. கிஷன் ரெட்டி அவர்கள், சுவதேஷ் தர்ஷன் திட்டத்தின் கீழ் கன்னியாகுமரியில் கடற்கரை முகப்புப்பகுதி மேம்பாட்டு பணிகளை சிறப்பாக மேற்கொண்டதற்காக தமிழ்நாடு சுற்றுலாத் துறைக்கு வழங்கிய விருதினை சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மை செயலாளர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தலைவர் டாக்டர். சந்தர மோகன் B. இ.ஆ.ப., பெற்றுக்கொண்டார்.

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை—600 001.